SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:5, Issue:04, Pages:56
NOVEMBER-2025, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2025,
விலை ரூ.20/-



திருச்சானூர்
ஸ்ரீபத்மாவதித் தாயார் பஞ்சமி தீர்த்தம்
25-11-2025







2025, செப்டம்பர் 24,25 ஆம் தேதிகளில் திருவேங்கடமுடையானைத் தரிசித்து, பெரிய சேஷ வாகன சேவையில் பங்கு பெற்ற மேதகு பாரத துணைக் குடியரசுத் தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்னன் அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப் படத்தை வழங்கும் மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. நாரா சந்திரபாபு நாயுடு அவர்கள் உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்கள், தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர்கள்















திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு 24-09-2025 அன்று ஆந்திர மாநில அரசு சார்பில் பட்டு வஸ்திரங்களைச் சமர்ப்பித்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. நாரா சந்திரபாபு நாயுடு குடும்பத்தினருக்கு ஸ்வாமி பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்கள், முதல்வர் அவர்களுக்கு ஸ்வாமி சித்திரப் படத்தினை வழங்கும் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். அவர்கள். பின்னர் 2026 ஆம் ஆண்டிற்கான தி.தி.தே. நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பேட்டினை வெளியிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர், தி.தி.தே. செயலாட்சித் தலைவர் மற்றும் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர்கள்



*தே$_3$ஹீ நித்யமவத்$_4$யோயம் தே$_3$ஹே ஸர்வஸ்ய ப$_4$ாரத।*
*தஸ்மாத்ஸர்வாணி பூ$_4$தாநி ந த்வம் சோசிதுமர்ஹஸி॥*

**அர்ஜுனா! இந்த ஆத்மா எல்லோருடைய உடலிலும் எப்பொழுதும் கொல்லப்பட முடியாதது. ஆகவே, எல்லா உயிரினங்களுக்காகவும் நீ வருந்துவது தகுந்ததன்று.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–30*

*ஸ்தோதவ்யத்வம் திசதி பவதீ தேஹிபி: ஸ்தூயமாநா*
*தாமேவ த்வாமநிதர கதி: ஸ்தோது மாசம்ஸமாந: ।*
*ஸித்தாரம்ப: ஸகல புவந ச்லாகநீயோ பவேயம்*
*ஸேவாபேக்ஷா தவ சரணயோ: ச்ரேயஸேகஸ்ய ந ஸ்யாத் ॥*

**நீ பிராணிகளால் துதிக்கப்படுமவளாய், பிறரால் போற்றப்படும் தன்மையை அவர்களுக்குக் கொடுக்கின்றாய். அத்தகைய உன்னையே வேறு புகலற்ற அடியேன் துதிப்பதற்கு விரும்புமவனாய், என் முயற்சி பலிப்பவனாய், உலகம் முழுதும் புகழ்தற்கு உரியனாக ஆவேன். உன் திருவடிகளில் தொண்டு செய்ய விரும்புதல் எவனுக்கு நன்மையின் பொருட்டு ஆகாது.**

*- ஸ்ரீஸ்துதி - 3*







## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவம்

### 17-11-2025 முதல் 25-11-2025 வரை

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
| --- | --- | --- | --- |
| 16-11-2025 | ஞாயிறு | லக்ஷ குங்குமார்ச்சனை | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 17-11-2025 | திங்கள் | திருச்சி உத்ஸவம்- துவஜாரோஹணம் | சிறிய சேஷ வாகனம் |
| 18-11-2025 | செவ்வாய் | பெரிய சேஷவாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 19-11-2025 | புதன் | முத்துப்பந்தல் வாகனம் | சிம்ம வாகனம் |
| 20-11-2025 | வியாழன் | கல்ப விருக்ஷ வாகனம் | ஹனுமத் வாகனம் |
| 21-11-2025 | வெள்ளி | பல்லக்கு உத்ஸவம் மாலை: வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 22-11-2025 | சனி | சர்வபூபால வாகனம், தங்கத்தேர் | கருட சேவை |
| 23-11-2025 | ஞாயிறு | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 24-11-2025 | திங்கள் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 25-11-2025 | செவ்வாய் | அவப்ருதம், சக்கரஸ்நானம், பஞ்சமி தீர்த்தம் | திருச்சி உத்ஸவம், துவஜாவரோஹணம் |

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2025

மலர் 05 இதழ் 04



## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| ஸ்ரீகுணரத்னகோசத்தில் குணவதியின் பெருமை – திரு. ஏ.கே.கோபி, கள்ளக்குறிச்சி. | 7 |
| சதுஸ்லோகீயிலும், அருளிச் செயலிலும் பிராட்டியின் பெருமை –திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன், சென்னை. | 11 |
| நிலப்பிரச்சனையை நீக்கிடும் நிலமங்கைத் தாயார் – திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி. | 14 |
| தாயாரின் அற்புத வைபவத்தில்... –பேராசிரியர்.எஸ்.கோகுலாச்சாரி,புவனகிரி. | 18 |
| கைசிக மாஹாத்மியம் – திரு. ஆர். கண்ணன், பெங்களூர். | 22 |
| புண்ணியம் தரும் குங்குமார்ச்சனை –திருமதி பா. கவிதா, சிதம்பரம். | 31 |
| திருமகளின் திருவருள் – முனைவர் ச. சிவகாமசுந்தரி, காஞ்சிபுரம். | 33 |
| 108 திவ்யதேச வைபவம் : திருவேங்கடம் – உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 37 |
| மகாகவி போற்றிய ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயார் – திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 39 |
| பிரம்மாண்ட நாயகியின் பிரம்மோத்ஸவம் – திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம், சென்னை. | 42 |
| விஜயதாசர் போற்றிய லக்குமிதேவி – திருமதி ஹேமா, திருப்பதி. | 45 |
| ராசிபலன்கள் : நவம்பர் 2025 – டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 47 |
| நீதிக்கதை: உழைப்பு என்பதே லக்ஷ்மிகரம் – திரு.எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி. | 48 |
| சிறுவர் உலகம் : பல்சுவைப் பகுதி | 49 |
| சித்திரக்கதை : பொன்மழையைப் பொழிவித்த பொற்றாமரையாள் | 52 |

சிறப்பு ஆசிரியர் :
**திரு.அனில்குமார் சிங்ஹால்,** ஐ.ஏ.எஸ்.
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்–ஆசிரியர், பிரதான ஆசிரியர் (கூடுதல் பொறுப்பு) :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி., பி.ஜி.டிப்.இன் ஜே.எம்.சி.,

அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ., பி.இடி,
துணை செயலாட்சித் தலைவர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", 2nd Floor, T.T.D Press Building, Tirupati - 517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264363**

நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர்
-பிரதான ஆசிரியர்

### வாசகர்களுக்கு...

*இவ்விதழ் திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித் தாயார் பிரம்மோத்ஸவச் சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய பல தொடர் கட்டுரைகள் இடம்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*
*-பிரதான ஆசிரியர்*



### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீபத்மாவதித் தாயார், திருச்சானூர்
பின்னட்டை : புஷ்ப யாகத்தில் ஸ்ரீபத்மாவதித் தாயார், திருச்சானூர்



உங்களுடன்

# பிரம்மாண்ட நாயகியை பிரம்மோத்ஸவத்தில் வணங்கிடுவோம்!

பத்மாலங்க்ருத பாணிபல்லவயுகாம் பத்மாஸநஸ்தாம் ச்ரியம்।
வாத்சல்யாதி குணோஜ்ஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகந் மாதரம்॥

இந்த உலகமே ஐச்வரியமானது. மகரிஷிகள் கூட செல்வத்துடன் கூடிய தெய்வீகத் தன்மையால் மகாலட்சுமியின் வடிவில் தரிசித்தனர். ஜெகத்காரகனான எம்பெருமானின் சக்தி லட்சுமியே ஆவாள். மகாலட்சுமி என்றாலே செல்வத்தின் வடிவம் மட்டுமல்ல தூய சத்துவ குண வடிவமாவாள். மங்கலகரமான குணங்களின் இருப்பிடம் ஆவாள்.

மகாலட்சுமித் தாயாருக்கு பத்மா எனும் பெயரும் உண்டு. செழிப்பைத் தரக்கூடியது பத்மம். பத்மம் செழிப்பான ஞானத்திற்கும், ஐச்வர்யத்திற்கும் அடையாளமாக விளங்குகின்றது. மகாவிஷ்ணுவின் இதயக்கமலத்தில் லட்சுமி தேவி வீற்றிருக்கின்றாள் எனப் புராணங்கள் மட்டுமின்றி ஆழ்வார்களும் கூறுகின்றனர். இதன் மூலம் எம்பெருமானுக்கு பத்மநாபன், பத்மப்பிரியன், ஸ்ரீ:பதி எனும் திருநாமங்கள் இருப்பதையும் நாம் அறிய முடிகிறது. அதாவது ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சங்கல்ப சக்தியே ஐச்வர்யமாகப் பரவியுள்ளது என்பது இதன் பொருளாகும்.

உலகம் முழுவதும் வியாபித்திருக்கும் ஐச்வர்ய லட்சுமியான ஸ்ரீபத்மாவதித் தாயார் கொலுவீற்றிருக்கும் திருச்சானூரில் தாயாருக்கு கார்த்திகை மாதம் பத்து நாள் பிரம்மோற்சவம் மிகப் பிரம்மாண்டமாக, மிகவும் கோலாகலத்துடன் நடைபெறும். பிரமோற்சவத்தின்போது தாயாருக்கு நாள்தோறும் நடைபெறுகின்ற வெவ்வேறு வாகன சேவைகளில் மிக முக்கியமானது கஜ வாகனம் எனப்படும் யானை வாகனம் ஆகும். யானை நிலைத்தன்மை மற்றும் பலத்தின் வடிவமாகும். யானை வாகனத்தில் கஜலட்சுமியாக ஸ்ரீ பத்மாவதித் தாயார் எழுந்தருள்வதால் பக்தர்களுக்கு பக்தியும், தைரியமும் கிடைக்கின்றது.

கார்த்திகை சுத்த பஞ்சமி பிரம்மாண்ட நாயகியான அலர்மேல் மங்கைத் தாயார் அவதரித்தத் திருநாளாகும். அன்றைய தினம் திருவேங்கடமுடையான் பத்மாவதித் தாயாருக்கு அவதார நாள் காணிக்கையாக புடவை, சந்தனம், மஞ்சள், குங்குமம், துளசி, பிரசாதங்கள் எனப் பலவற்றை திருமலையில் இருந்து திருவீதி வலமாக திருச்சானூருக்கு அனுப்பி வைப்பார். தாயாரும் தன் மணாளன் அனுப்பி வைத்த மங்கலப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு, தான் அவதரித்த பத்மசரோவரக் கரையில் சக்கரத்தாழ்வாரோடு திருமஞ்சனம் கண்டருள்வார். பின்னர் பத்ம சரோவரத்தில் சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரி கண்டருள்வார். இந்தக் கண்கொள்ளா காட்சியினைக் கண்டுகளிக்கவும், பத்ம சரோவரத்தில் புனித நீராடவும் லட்சக்கணக்கான பக்தர்களும் திருச்சானூருக்கு வருகை தந்து தாயாரின் இன்னருளுக்குப் பாத்திரமாவார்கள்.

இந்தக் கார்த்திகை மாதத்தில்தான் திருப்பதியில் கபில தீர்த்தத்தில் அருள் புரியும் ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமிக்கு அன்னாபிஷேகமும், லக்ஷ வில்வார்ச்சனையும் நடைபெறும். இந்த உற்சவங்களைத் தரிசிப்பதும் கண்களுக்கு விருந்தாக அமையும். மேலும், திருப்பதி கபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் வீற்றிருக்கும் குமாரசுவாமியான முருகப் பெருமானுக்கு கந்த சஷ்டி விழாவும் நடைபெறும். திருமலையிலும் திருவேங்கடமுடையான் சன்னதியில் கைசிக துவாதசி உற்சவமும் சிறப்பு வாய்ந்ததாகும். கைசிக துவாதசியை முன்னிட்டு பஞ்ச உற்சவ மூர்த்திகளில் ஒருவரான உக்கிர ஸ்ரீநிவாச மூர்த்தி சூரிய உதயத்திற்கு முன்னதாக திருமலை மாடவீதிகளில் எழுந்தருள்வார். கார்த்திகை பௌர்ணமி அன்று திருமலை ஆலயத்தில் தீப உற்சவமும், ஜ்வாலாதோரணமும் முக்திக்கு வழிவகுக்கும்.

இம்மாதத்திலேயே திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்குட்பட்ட உப திருக்கோயில்களான நாராயணவனம் ஸ்ரீ கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு தெப்போற்சவமும், நகரி ஸ்ரீ கரிய மாணிக்க ஸ்வாமிக்கு பவித்ரோற்சவமும், நாகுலாபுரம் ஸ்ரீ வேத நாராயண ஸ்வாமிக்கு பவித்ரோற்சவமும், திருச்சானூர் ஸ்ரீ பத்மாவதித் தாயாருக்கு புஷ்ப யாகமும் நடைபெறும். நாமும் இந்த உற்சவங்களில் பங்கு கொண்டு அலர்மேல்மங்கைத் தாயார் மற்றும் ஸ்ரீநிவாசனின் இன்னருளைப் பெறுவோம்.

# ஸ்ரீகுணரத்னகோசத்தில் குணவதியின் பெருமை

- திரு.ஏ.கே.கோபி,
கள்ளக்குறிச்சி.
94438 79592

ஸ்ரீ:ய பதியான ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீவைஷ்ணவ சரணாகத சித்தாந்தத் தினைப் பரிமளிக்கச் செய்து பாதுகாக்க இப்புவியிலே அவதரிக்கச் செய்த ஆசார்ய புருஷர்களுள் பகவத் ஸ்ரீராமாநுஜரின் சிஷ்யரான ஸ்ரீகூரத்து ஆழ்வானின் திருக்குமாரர் ஸ்ரீபராசர பட்டர் மிகவும் பிரசித்திபெற்ற ஆசார்ய புருஷர். இவர் சகல வேத சாஸ்திரங் களையும், அருளிச்செயல் வியாக்கி யானங்களையும் குறைவறக் கற்று ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் வாழ்ந்து இருந்து ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தினை நஞ்சீயர் முதலான சிஷ்யர்களோடு நிர்வகித்து வந்தார்.

**ஸ்ரீகுணரத்னகோசம்:**

திருவரங்கனின் தர்மபத்தினியான ஸ்ரீரங்க நாச்சியாரின் வடிவழகிலும், குணபூர்த்தியிலும், புருஷகாரத்வத்தி லும் மிகவும் ஈடுபட்டு ஸ்ரீகுணரத்ன கோசம் எனும் 61 சுலோகங்கள் கொண்ட ஸ்தோத்திரத்தினை பட்டர் இயற்றி அருளியுள்ளார். 'கோசம்' என்பதற்கு மூடிப் பாதுகாக்கும் உறை என்பது பொருள்.

ஸ்ரீகுணரத்னகோசத்தின் சில சிறந்த கருத்துக்களைச் சுருக்கமாக அனுபவிக்கலாம்.

*தேவி ச்ருதிம் பகவதீம் ப்ரதமே புமாம்ஸ:*
*த்வத் ஸத்குண ஒக மணிகோச க்ருஹம் க்ருணந்தி*
*தத்த்வார பாடந படுநிச ஸேதிஹாஸ*
*ஸந்தர்க்கண ஸ்ம்ருதி புராண புரஸ்ஸராணி .*

– ஸ்ரீகுணரத்னகோசம்–10

உயர்ந்த நான்கு வேதங்களை நன்கு வேலைப் பாடுகளுடன் கூடிய தங்கத்தினாலான பெட்டகம் போன்று கருதினால் அப்பெட்டியினுள் மிகவும் மதிப்பு வாய்ந்த ஒளிவீசும் நவரத்தினங்களாக ஸ்ரீரங்கநாச்சியாரின் திருக் கல்யாண குணங்கள் பாதுகாப்புடன் வைத்து பூட்டப்பட்டு உள்ளதாக வேதம் வல்லார்கள் நிர்ணயம் செய்கிறார்கள். இதிகாசங்கள் மற்றும் மீமாம்சை என்கிற திறவுகோலால் வேதப் பெட்டியினைத் திறந்தால் ஸ்ரீரங்க நாச்சியாரின் அருட் செல்வத்தில் திளைக்கலாம்.

**திருமகள் அவதாரம் :**

தேவர்களுக்கு அமிர்தம் அளிக்கும் பொருட்டு எம்பெருமான் கூர்மாவதாரம் எடுத்து மந்த்ர மலையினை



முதுகிலே தாங்கி திருப்பாற்கடலைக் கடைந்த போது அழகிய தாமரை மலரில் வீற்றிருப்பவளாய் அழகிய திருமுகமண்டலத்தில் வாத்சல்யம் வழியும் பார்வையும், வசீகரப் புன்னகையும் மிளிர, குளிர்ச்சியான வெண்மையான கதிர்களை வீசும் முழு வெண்ணிலவு போன்று மகாலக்ஷ்மி திருப்பாற்கடலிலிருந்து அவதாரம் செய்து, எம்பெருமானின் திருமார்பினைச் சென்றடைந்து நித்யவாசம் செய்கின்றாள். எம்பெருமான் பூலோகத்தில் இராமனாக, கிருஷ்ணனாக அவதாரம் செய்யும்போது திருமகளும் கூடவே சீதையாக, ருக்மிணியாக அவதாரம் செய்வதால் எம்பெருமானின் அவதாரங்கள் முழுமையடைகின்றன.

திருமகள் அவதாரம் செய்த இடம் என்பதால் திருப்பாற்கடலினை மதித்தும், புகுந்த இடம் என்பதால் நித்யசூரிகள் எம்பெருமானுக்கு கைங்கர்யம் புரிந்து துதித்து கொண்டிருக்கும் திருப்பரமபதத்தினை உயர்வாகவும் போற்றும் திருமகள் தற்போது அர்ச்சாவதாரத்தில் எம்பெருமான் திருவரங்கத்தில் சேவை சாதிக்கும்போது அடியார்களைக் காத்தருளும் பொருட்டு ஸ்ரீரங்கநாயகியாய் மிகவும் வாத்சல்யத்துடன் சேவை சாதித்தருள்கிறாள்.

### திருமேனி

நன்கு இதழ்விரித்த அழகான தாமரை மலரில் வீற்றிருக்கும் ஸ்ரீரங்கநாச்சியாரின் திருமேனி பால்யப் பருவமும், யௌவனப் பருவமும் சந்திக்கும் நிலையில் பொன்னிறத்தில் ஒளிவீசி ஜொலிக்கிறது. திருவரங்கநாதன் சூல்கொண்ட மேகத்தின் கருமை நிறம் பெற்றவனாய் காளைப் பருவத்தில் கம்பீரமாய் சேவை சாதிக்கிறான்.

பெரியபிராட்டியார் சாற்றியுள்ள நெற்றிச் சுட்டி, முத்துத் தோடுகள், முத்து மாலைகள் நவரத்தினமணிகளாலான மாலைகள், தங்க ஒட்டியாணம், அழகான திருவடிச் சிலம்புகள் முதலான திருவாபரணங்களும், பெரிய பெருமாள் சாற்றியுள்ள சங்கு, சக்கரம், கதை, சார்ங்கம், வாள் எனும் பஞ்சாயுதங்களும், திரு மேனியில் சாற்றப் பெற்ற பல்வகை நவரத்தின மாலைகளின் ஒளிவீச்சும் சேவிப்பவர்களின் கண்களுக்குப் பேரானந்தம் அளிக்கின்றன.

தம்மை வணங்கும் அடியார்களுக்கு உத்தமப் பெண்பிள்ளையாய் பதில் வணக்கம்




**பூரண கும்பம், மஞ்சள், குங்குமம், திருமண், சூர்ணம், கோலம், சந்தனம், வாழை, மாவிலைத் தோரணம், வெற்றிலை, திருவிளக்கு, யானை, பசு, குதிரை திருமுகம், கண்ணாடி, உள்ளங்கை, தீபம் இவை அனைத்தும் லக்ஷ்மிக்கு மிகவும் பிடித்தவை. சங்கு, நெல்லிக்காய், பசுஞ் சாணம், கோஜலம், தாமரைப்பூக்கள், சுத்தமான ஆடைகள் வீட்டில் இருப்பது சுபம்.**

**வீட்டில் நெல்லி மரம் இருந்தால் லக்ஷ்மி கடாக்ஷம் மேன்மேலும் பெருகும்.**

**ஸ்ரீமந்நாராயணனின் பெருமை பேசப்படும் இடத்தில், நாம பாராயணம் ஒலிக்கும் இடத்தில் அன்னை திருமகள் தானாகவே வந்துவிடுகிறாள்.**

**தினசரி துளசி மாடத்திற்கு விளக்கேற்றி மும்முறை வலம் வந்தால் அங்கு லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும்.**

**கோமாதா பூஜை குபேர பூஜைக்குச் சமம். பசுக்களுக்கு பசும்புற்களை தானம் செய்தாலும் லக்ஷ்மி தேவி மனம் மகிழ்வாள். எந்த வீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகிறார்களோ, எந்த வீட்டில் பெண்கள் மகிழ்ச்சியுடன் சந்தோஷமாக இருக்கின்றார்களோ அங்கு திருமகள் குடியேறுவாள்.**

அதிகாலை 4.00 மணி முதல் 5.00 மணி வரை பிரம்ம முகூர்த்தம் என்பர். அந்நேரத்தில் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும். இந்நேரத்தில் எழுவது பழகிவிட்டால் பிறகு அதுவே வழக்கமாகிவிடும். இப்படி செய்வது ஆரோக்கியம், நீண்ட ஆயுள் முதலிய பலனைக் கொடுப்பதுடன் லக்ஷ்மி கடாக்ஷமும் கிட்டும்.

பிரம்ம முகூர்த்த நேரத்தில் தேவர்களும், முன்னோர்களும் ஒவ்வொரு இல்லம் தேடி வருவர். அப்போது விழித்திருந்து மனதால் அவர்களை வழிப்பட்டால் அவர்களைக் கௌரவித்து வரவேற்பதற்குச் சமமாகும். இதனால் தேவர்கள் மகிழ்ந்து நமக்கு நன்மை செய்வார்கள். அதிகாலை 5 மணிக்கு கொல்லைப்புற வாசலைத் திறந்து வைத்து அதன் பின்னரே தலை வாசலைத் திறக்க வேண்டும்.



## துயிலெழும் போது...

அதிகாலை விழித்தவுடன் தன்னுடைய கரங்களை முதலில் காணுதல் வேண்டும். பின்னர் தெய்வ வடிவங்கள், தன் கணவர்/மனைவி, மக்கள், பெற்றோர்கள், பசு, குதிரை, யானை (சித்திரப் படம்) போன்றவற்றை பார்த்தல் நன்று. காலையில் எழுந்தவுடன் யார் முகத்தையும் பார்க்காமல் தண்ணீர் இரண்டு மடக்கு குடிக்க,லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும், கோபம் வராது.இறைவனிடம் இன்றைய பொழுது நமக்கும், நம்மை சார்ந்தவர்களுக்கும் நன்மையை அளிக்க வேண்டிக்கொண்டு எழுதல் வேண்டும்.

**தொகுப்பு - திரு. எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

செய்வதால் பெரியபிராட்டியாரின் திருமுடி சற்றே சாய்ந்துள்ளது. திருவரங்கநாதனின் திருமேனியில் பிராட்டியின் மென்மையான திருமேனி சற்றே பட்டதால் உண்டான வெட்கம் காரணமாக பிராட்டியின் திருமேனி சற்றே ஒடுங்கி சிவந்த பொன்நிறமாய் ஒளிவீசுகிறது.

எம்பெருமானின் திருமார்பில் சேவை சாதிக்கும் பெரியபிராட்டியாரின் திருவடிகள் திருவரங்கநாதன் சாற்றியுள்ள வைஜெயந்தி மாலையின் மீது மென்மையுடன் படுவதால் குளிர்ந்த நீரினைத் தெளித்ததைப் போன்று அம்மாலை வாடாமல் எப்போதும் புதியதைப் போன்று உள்ளது.

### திருமகள் திருவருள்

ஸ்ரீரங்கநாச்சியாரின் அழகிய கொடிபோன்றதும், வில் போன்றதுமான புருவங்கள் யார் ஒருவனை நோக்கி அசைகின்றதோ அவனை நோக்கி இன்பம், அறிவு, கல்வி, வலிமை, செல்வம், வீரம் முதலானவை “நான் முதலில் செல்வேன்”; “நான் முதலில் செல்வேன்” எனப் போட்டிபோட்டுக்கொண்டு சென்று அவனைச் சுற்றி வெள்ளமிடுகின்றன.

புதையலைத் தேடுபவர் சித்தாஞ்சனம் எனும் மையினைக் கண்களில் எழுதிக் கொண்டு தேடுவர். பக்தி எனும் சித்தாஞ்சனத்தினை அணிந்துகொண்டு வேதங்களைப் படித்தால் ஸ்ரீரங்கநாச்சியாரினைப் பற்றின ஞானம் எனும் மறைந்திருக்கும் புதையல் கிடைக்கும். இந்த ஞானம் முடிவில் ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் கொண்டு சேர்த்துவிடும்.

### புருஷகாரம்

குற்றம் புரியும் அடியார்களிடம் பெரியபெருமாள் தந்தையினைப் போன்று அவர்களின் நன்மையின் பொருட்டு சினம் கொண்டு தண்டனை வழங்க முயலும்போது எம்பெருமானைத் தடுத்து நிறுத்தி உலகத்தில் குற்றம் செய்யாதவர்கள் யார் உள்ளார்கள் என இதமாகப் பேசிப் புருஷகாரம் செய்தருளி ஒரு தாயினைப் போன்று எம்பெருமானின் சினத்தைக் குறைத்து தண்டனையிலிருந்து காத்தருளுகிறாள்.

இராமாவதாரத்தில் இராமன் தம்மைச் சரணடைந்த காகாசுரன், விபீஷணன் இருவரையும் காப்பாற்றி அருளினார். ஆனால், சீதாதேவியோ அசோகவனத்தில் தம்மை துன்புறுத்திய, தம்மைச் சரணடையாத அரக்கிகளை அனுமனிடம் இருந்து காப்பாற்றினாள்.

பெரியபிராட்டியாரின் திருமுன்பு தலைக்கு மேலே கைதூக்கி வணங்கி நிற்கும் அடியவரைக் கண்டவுடன் “அவன் கைகள் நோகுமே” என்றும், “கைகள் பாரத்தினை அவன் தாங்குவானா” என்றும் பிராட்டி துடிதுடித்து அவனுக்குச் செல்வமும், கைங்கர்யம் செய்யும் வாய்ப்பினையும், உயர்ந்த மோட்சத்தினையும் அருளிய பிறகும் இவன் வேண்டியது கிடைத்ததா? குறைவாகக் கொடுத்துவிட்டோமா? என்று பலவாறாக எண்ணியபடி வெட்கத்தினால் சற்றே தலையினைத் தாழ்த்தி சேவைசாதிக்கிறாள் ஸ்ரீரங்கநாச்சியார்.

*ஸ்ரீரங்கே சரத: சதம் ஸஹ*
*ஸுஹ்ருத்வர்ககேண நிஷ்கண்டகம்*
*நிர்துக்கம் ஸுஸுகஞ்ச தாஸ்யரசிகாம்*
*புக்த்வா ஸம்ருத்திம் பராம்*
*யுஷ்மத் பாத ஸரோருஹ அந்தர ரஜ:*
*ஸ்யாம த்வம் அம்பா பிதா*
*ஸர்வம் தர்மம் அபித்வம் ஏவபவந:*
*ஸ்வீகுரு அகஸ்மாத் க்ருபாம்.*

– ஸ்ரீகுணரத்னகோசம் – 61

திருவரங்கத்தில் நூறுவருடங்கள் அடியார்களுடன் சேர்ந்து, ஸ்ரீரங்க நாச்சியாரைத் தடைகள் இன்றி துதித்து, இன்பமே பெருகும் வண்ணம் கைங்கர்யங்கள் பலவும் செய்து வாழ்ந்திருக்கவும், பெரிய பெருமாள் பெரியபிராட்டியுடன் சேர்த்தியில் தாயாகவும், தந்தையாகவும் மற்றும் அனைத்து உறவாகவும் இருந்து மோட்சம் அடையும் அனைத்து உபாயங்களையும் கருணையுடன் அருளி திவ்யதம்பதிகளின் திருவடிகளில் சேர்ந்துள்ள துகள்களில் ஒரு துகளாக எப்போதும் தாம் கலந்திருக்க ஸ்ரீரங்க நாச்சியாரிடம் பிரார்த்தனை செய்கிறார் ஸ்ரீபராசரபட்டர்.

*பன்னுகலை நால்வேதப் பயன்*
*தெரிந்தோன் வாழியே!*
*பராசரனாம் சீர்பட்டர் பாருலகில்*
*வாழியே!*




- வீட்டு வாசலில் கோலம் இடுவது அவசியம். கோலம் இட்ட வீட்டில் திருமகள் தங்குவாள்.
- அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள் தங்கள் முதன்மை வாயிலில் கோலம் போடலாம்.
- ஒருவருக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்றால் வாசல் படியில் நின்று கொடுக்கக் கூடாது.
- கொடுப்பவரும், வாங்குபவரும் வாசற்படிக்கு உள்ளே இருந்து வாங்க வேண்டும் அல்லது கீழே இறங்கி வாங்க வேண்டும்.
- சாம்பிராணி உள்ளிட்ட நறுமணப் பொருட்களை அடிக்கடி வீட்டில் உபயோகிக்க வேண்டும்.
- இரவில் வீட்டைப் பெருக்கினாலும் குப்பையை வெளியே கொட்டக் கூடாது.
- வீட்டில் தூசி, ஒட்டடை சேரவிடாது அடைசல்கள் இன்றி சுத்தமாக வைத்து இருப்பது அவசியம்.
- பகலில் குப்பையை வீட்டினுள் எந்த மூலையிலும் குவித்து வைக்கக் கூடாது.
- விளக்கு ஏற்றிய பிறகு பால், தயிர், உப்பு, ஊசி இவற்றைப் பிறருக்குக் கொடுக்கக் கூடாது.
- அரிசியைக் கழுவும் போது தரையில் சிந்தக் கூடாது.
- வாசல்படி, உரல், ஆட்டுக்கல், அம்மி இவைகளில் உட்காரக்கூடாது.
- பணம், நாணயம் உள்ளிட்டவைகளைக் கண்ட இடத்தில் வைக்கக்கூடாது.
- குழந்தைகள் விளையாடும் சந்தோஷ ஒலி, பறவைகள் எழுப்பும் இனிய கீதங்கள், வீணை, மிருதங்கம் போன்ற வாத்தியங்களின் இனிய இசை நம் இல்லங்களில் நிறைந்திருந்தால் லக்ஷ்மி கடாட்சம் பெருகும்.

# சதுஸ்லோகீயிலும், அருளிச்செயலிலும் பிராட்டியின் பெருமை

- திருமதி பட்டம்மாள் ஜெகந்நாதன்,
சென்னை.9790938925.

மஹாலக்ஷ்மி கருணையே வடிவாக விளங்குபவள். நமக்கு ஹிதத்தையே (நன்மைகளையே) செய்வதை இயல்பாக உடையவள். *"மாத்ரு தேவோ பவ"* என்று வேதம் சொல்கிறது. இவள் பரிந்துரை இல்லை என்றால் நமக்கு வேறு கதியே இல்லை. அடியார்களிடம் இவ்வளவு கருணை உள்ள பிராட்டியின் மகிமையை ஸ்ரீ ஆளவந்தார் அருளிய சதுஸ்லோகீயின் மூலமாகவும், ஆழ்வார்களின் அருளிச் செயல் மூலமாகவும் நாம் அறிந்து கொள்வோம்.

**சதுஸ்லோகீ சுலோகம் 1**

*காந்தஸ் தே புருஷோத்தம: பணி பதிச்சய்யாஸனம் வாஹநம்*
*வேதாத்மா விஹகேச்வரோ யவனிகா மாயா ஜகன்மோஹிநீ*
*ப்ரஹ்மேசாதி ஸுரவ்ஜெஸ் ஸதயிதஸ்த்வத்தாஸ தாஸீகண:*
*ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி ப்ரூம: கதம் த்வாம் வயம்.*

**பொருள் :**

ஹே பகவதி! மஹாலக்ஷ்மி! உனக்குக் கணவன் புருஷர்களில் சிறந்த நாராயணன். ஸர்பங்களில் சிறந்த ஆதிசேஷனோ படுக்கை ஆசனம். வேத ஸ்வரூபியான கருடாழ்வார் வாஹனம். உலகத்தை மோஹிக்கும் மாயை உன்னை அறியவொட்டாமல் தடுக்கும் திரை. தேவர்களின் குழு உனக்கு கைங்கர்யம் செய்பவர்கள். உனக்கு பெயரோ "ஸ்ரீ" என்று எல்லாச் சொல்லுக்கும் மேன்மையைத் தெரிவித்துக் கொண்டு முன் நிற்பது. இவ்வளவு மஹிமை உள்ள உன்னை எவ்வாறு சொல்வது, புகழ்வது!

நம்மாழ்வாரும் தன் திருவாய்மொழியில் 4ஆம் பத்து முதல் 10 பாசுரங்களால் அனுபவிக்கிறார். ஒளி பொருந்திய திருமுடியை உடையவள், மணமுள்ள திருத்துழாய் மாலையை அணிந்தவள், நீலமணி போல சுடர்விடும் திருமேனியை உடையவள், ஆழ்ந்து பரந்த கடலைப் படுக்கையாகக் கொண்ட தன் மணாளனுக்குத் தொண்டு செய்பவள். பெருமாளின் திருக்கல்யாண குணங்களில் ஒத்து இருப்பவள். ஆதிசேஷனைப் படுக்கையாகக் கொண்டவள்.

தேவர்கள் எல்லோரும் இவளுக்கு கைங்கர்யம் செய்கிறார்கள். இவ்வளவு மேன்மைகளும் உடைய தாயாருடன் இருக்கும் திருநாராயணன் தாள்களைப் பற்றி அடிமை செய்வதே நமக்குப் பேரருள் ஆகும் என்கிறார்.

**சதுஸ்லோகீ சுலோகம் 2**

*யஸ் யாஸ் தே மஹிமான மாத்மன*
*இவ த்வத் வல்ல போபி பிரபு:*
*நாலம் மாதும் இயத் தயா நிரவதிம்*
*நித்யாநு கூலம் ஸ்வத:*
*தாம் த்வாம் தாஸ இதி ப்ரபன்ன இதிச*
*ஸ்தோஷ்யாம்யஹம் நிர்பயோ*
*லோகைகேச்வரி! லோகநாத தயிதே!*
*தாந்தே! தயாம் தே விதந்*



**பொருள் :**

எந்த உன்னுடைய இயற்கையாகவே உனக்கு நித்யாநுகூலமாகவும், எல்லையில்லாததுமான உன்னுடைய பெருமையை உன் அன்புக்கு உரியவனான ஈச்வரனும் இவ்வளவு என்று அளவிடுவதற்குத் திறமையற்றவனாகிறானோ அப்படிப்பட்ட உன்னை, அடியேன் தாஸன் என்றும், சரணாகதன் என்றும் சொல்லி நான் கொஞ்சமேனும் பயனற்றவனாகத் துதிக்கிறேன். உலகத்துக்கு ஒரே நாயகியாகவும் ஒரே நாதனான நாராயணனின் மார்பில் உறைபவளே! பொறுமையுள்ளவளே ! உன் தயையை அறிந்து நான் இப்படிக்கூறுகிறேன் என்கிறார் ஆளவந்தார்.

நம்மாழ்வாரும்,

*சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்*
*மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்*

– திருவாய்மொழி 9–10–5

பகவான் தன் திருவடிகளை அடைந்தவர்களை எல்லா விதத்திலும் காப்பாற்றுகிறார். மரண காலத்தில் அவனுக்குப் பரமபதத்தையும் தருகிறார். அதுபோலவே தாயாரும், *''அனைத்துலகுமுடைய அரவிந்த லோசனனை தினைத்தனையும் விடாள்''* (திருவாய்மொழி 6–7–10) என்கிறார் நம்மாழ்வார்.

தினை அளவு கூட அதாவது கொஞ்சம் கூட அவனை விட்டுப் பிரியாத திவ்ய தம்பதிகள் சேர்ந்தே

## மகாலட்சுமி தாயார் நம் வீடு தேடி ஓடி வர...

மகாலட்சுமியை நம் வீட்டிற்குள் நிரந்தரமாக அமர வைக்க, நிலை வாசலில் இந்த ஒரு இலையை மட்டும் கட்டி தொங்க விடுங்கள் போதும். நிச்சயமாக நல்லது நடக்கும். பணக் கஷ்டம் தீரும். நீங்களும் செல்வந்தர்களாக மாறுவீர்கள். மருதாணி இலையில் மகாலட்சுமி வாசம் செய்கிறாள். அம்மருதாணி இலையை எப்படி நிலை வாசலில் கட்டி தொங்க விட்டால் மகாலட்சுமி வீட்டில் இருந்து வெளியே போக மாட்டாள்?

மருதாணி இலைகளைக் காம்புகளோடு உடைத்து நூல் போட்டுக் கட்டிக் கொத்தாக தயார் செய்து வீட்டின் பெரியவர்கள் கையில் வைத்துக் கொள்ளுங்கள். வீட்டில் இருக்கும் அனைவரது தலையையும் இந்த மருதாணி இலையை மூன்று முறை சுற்றியபின், நிலை வாசலில் மருதாணி இலையை மேல்பக்கத்திலிருந்து கீழ்ப்பக்கம் பார்த்தபடி தொங்க விட வேண்டும்.

தயார் செய்த இந்த மருதாணி இலையை நிலை வாசலில் நடுப்பகுதியிலோ அல்லது வலது பக்கத்திலோ, இடது பக்கத்திலோ ஏதோ ஒரு பக்கத்தில் கட்டி தொங்க விட்டால்போதும் உங்கள் வீட்டிற்குள் இருக்கும் மகாலட்சுமியும் நிலை வாசலைத் தாண்டி வெளியே போக மாட்டாள். வீட்டிற்குள் வறுமை நுழையவே நுழையாது.

தினமும் வீட்டில் விளக்கு ஏற்றும் போது ஒரு ஊதுவத்தியை மட்டும் அந்த நிலைவாசலுக்கு காண்பிக்கும் போது, இம்மருதாணி இலைக்கும் காண்பிக்க வேண்டும். மாதத்தில் ஒரு நாள் இந்த இலை காய்ந்து சருகாகி கீழே கொட்டிவிடும். மீண்டும் இதை புதுப்பித்துக் கொள்ளுங்கள். நிலை வாசலில் மேலே சொன்ன முறைப்படி மருதாணி இலையை வைத்துப் பாருங்கள் மகாலட்சுமி மறுபேச்சு பேசாமல் உங்கள் வீட்டில் தங்கி விடுவாள் என்பது நம்பிக்கை.

**தொகுப்பு - திரு. எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருமலை

- திருமலையான் தரிசனத்திற்கு ஆலயத்தில் நுழையும் பக்தர்கள் காலணிகள், பைகள், ஆயுதங்கள், அலைபேசி மற்றும் மின்னணுக் கருவிகளை தங்களுடன் எடுத்துச் செல்லக் கூடாது.
- திருமலையானை தரிசிப்பதற்கு வி.ஜ.பி. தரிசனம் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/பஞ்சாபி டிரஸ்-சுடிதார்.

பலனை அருளுகின்றனர். இவள் அனுக்கிரகம் இல்லையேல் ஒன்றும் கிடையாது. ஆகவே ஆழ்வாரும் திவ்ய தம்பதிகள் தனக்கு உயர்ந்த பரமபதத்தைக் கொடுப்பார்கள் என்று அவர்களையே சரணாகதி அடைகிறார்.

**சதுஸ்லோகீ சுலோகம் 3**

*ஈஷத் த்வத் கருணா நிரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாத் ரக்ஷ்யதே*
*நஷ்டம் ப்ராக் ததலாப தஸ் த்ரிபுவனம் ஸம்ப்ரத்யனந் தோதயம்*
*ச்ரேயோ ந ஹ்யரவிந்த லோசனமன: காந்தா ப்ரஸாதாத்ருதே*
*ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத் வஸு ந்ருணாம் ஸம்பாவ்யதெ கர்ஹிசித்*

**பொருள் :**

பெருமானைப் போலவே தாயாரும் ஜகத் காரணமானவள் என்று விளக்குகின்றார். ஐச்வர்யம், கைவல்யம் மற்றும் மோக்ஷமும் இவள் அருளினாலேயே கிடைக்கின்றது என்று விளக்குகிறார். ஆக, ஜகத் காரணத்வம், மோக்ஷப்ரதத்வம் என இரண்டும் தாயாருக்கும் உண்டு என்பதை விளக்கும் சுலோகமாக நம்மாழ்வாரும், *''காளங்கள் வலம்புரி கலந்தெங்கும் இசை... ஆழியான் தமர்...''* (திருவாய்மொழி 10-9-6) என்கிறார்.

ஸ்ரீவைகுண்டத்தில் முக்தனானவனை ஐநூறு திவ்யாப் ஸரஸ்கள் தாயாரின் மனப்பாரிப்போடு வரவேற்கின்றனராம். தாமும் ஸ்ரீதேவி, பூமி தேவி, நீளா தேவியர்களுடன் நேரில் இந்த முக்தனை வரவேற்பதை நம்மாழ்வாரும், *''நிதியும், நற்சுண்ணமும், நிறைகுட விளக்கமும்''* (10-9-10) என்று விவரிக்கிறார். (நிதி-பெரிய பிராட்டி, நற்சுண்ணம்-பூமாதேவி, நிறைகுட விளக்கு-நீளாதேவி. ஆக வைகுண்ட பதவியை தாயார் நமக்கு அளிக்கும் போது, பூமாதேவியும், நீளாதேவியும் சேர்ந்து அளிக்கின்றனர். ஆக தாயாரும், பெருமாளும் ஆகிய இருவருமே நமக்கு உபாயமும் உபேயமும் ஆவார்கள்.

**சதுஸ்லோகீ சுலோகம் 4**

*சாந்தானந்த மஹாவிபூதி பரமம் யத்ப்ரஹ்ம ரூபம் ஹரே:*
*மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம்*
*யாந்யந்யானி யதாஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாந்*
*யாஹு: ஸ்வைரநுரூபரூபவிபவைர் காடோப கூடாநி தே*

**பொருள் :**

முதல் பாதத்தில் திவ்யாத்ம ஸ்வரூபமும், இரண்டாம் பாதத்தில் திவ்ய மங்கள விக்ரஹம் சொல்லப்பட்டு இவ்விரண்டு நிலைகளிலுமே பெருமாளும் தாயாரும் ஒருங்கிணைந்தவர்கள் என்கிற அர்த்தத்தை ஆளவந்தார் விவரிக்கிறார். பெருமாளும் தாயாரும் ஸத்ய ஸங்கல்பர்கள். எல்லாவற்றையும் விரும்பியபோது தானே முடிக்க வல்லவர்கள். அவர்களால் அடைய முடியாதது எதுவும் இல்லை. *''உனக்கேற்கும் கோலமலர்ப் பாவை''* (திருவாய்மொழி 10-10-6) என்று விளக்குகிறார் நம்மாழ்வார். அவ்வப்போது எம்பெருமானின் திருவுருவத்திற்கேற்ப தாயாரும் உருக் கொள்கிறாள். அவன் இராமனான போது இவள் சீதை, கண்ணனான போது இவள் ருக்மிணி. அந்தப் பிரவேச உதாரணாகிகள், அந்தர்யாமித் வாதிகள் பர்யந்தம் தாயாருக்கும் உண்டு என்கிறார். இதனால் பகவானுடைய எல்லா நிலைகளிலும் தாயாரும் சேர்த்து சொல்லப்பட்டது.

தாயாரின் கடாக்ஷம் யார் மேல் விழுந்தாலும் அவருக்கு வெற்றியே என்று காட்ட *''மலரான் மண நோக்கமுண்டானே''* என்று திருமங்கை மன்னனும், *''திரு நின்ற பக்கம் திருவிது''* (நான் மு.திரு.62) என்று திருமழிசை பிரானும் அருளியிருப்பதைக் காணலாம். இவ்வளவு மதிப்பிட முடியாத தாயாரின் பெருமைகளை அறிந்து அவள் தாள் பணிந்து உய்வடைவோம்.

கடல் அலைகள் ஆர்ப்பறிக்கும் வங்காள விரிகுடாவின் கிழக்கு கடற்கரையில் திருக்கடல் மல்லை எனும் மகாபலிபுரத்தில் அமைந்துள்ளது 108 திவ்யதேசங்களில் ஒன்றான இந்த தல சயனப் பெருமாள் திருக்கோயில்.

பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீமஹா விஷ்ணுவிற்கு ஆயிரம் கமலங்களைச் (தாமரை மலர்கள்) சமர்ப்பிக்க எண்ணினார் புண்டரீகன் என்ற முனிவர். பாற்கடல் சென்றிட கடல் தடையாக இருந்தது. தன் கரங்களையே ஒரு மண்பாண்டமாக எண்ணி பெருமாளை நினைத்தப்படி கடல் நீரை வாரி இறைத்துக்கொண்டிருந்தார்.

அம்முனிவரின் பக்திக்கு மெச்சி, சேஷ சயனத்தில் பள்ளி கொண்டிருந்த திருமால், முதியவர் வடிவில் வந்து, புண்டரீகனிடத்தில், உலகமுண்ட பெருவாயனான எம்பெருமான் "எனக்குப் பசிக்கிறது! உணவளிக்க இயலுமா?" என்று கேட்டார்.

"நான் இங்கிருந்து போனால் என் பணி நின்றுவிடுமே!" என்றார் புண்டரீக முனிவர். "நீ வரும் வரை உனக்காக நான் இப்பணியைத் தொடர்கிறேன்" என்றார் முதியவர் வடிவில் வந்திருந்த பரந்தாமன்.

புண்டரீகர் வேகமாகச் சென்று உணவு ஏற்பாடு செய்து கொண்டு வந்து பார்க்கும் பொழுது, (ஸ்வாமி நினைத்தால் கடல் நீரை இறைக்க எவ்வளவு நேரம் ஆகும்? தண்ணீரை ஒரு நொடியில் இறைத்து விட்டு, அப்படியே நிலத்திலே படுத்தார்.) ஸ்வாமி வெறும் நிலத்தில் படுத்து கொண்டிருந்தார். புண்டரீகர் வந்து "என்ன படுத்து விட்டீர்?" எனக் கேட்டதற்கு, "முனிவரே! இங்கே பாரும்! இங்கிருந்த கடல் நீரை எல்லாம் இறைத்து விட்டேன். அதனால்தான் இளைப்பாறுகிறேன்" என்றார்.

கடல் நடுவில் குடி கொண்டிருக்கும் என் ஸ்வாமி எங்கே? என்றதற்கு, எம்பெருமானும் தன்னை அடையாளம் காட்டினார். உடனே தாமரை மலர்களை பரந்தாமனின் திருவடிகளில் சமர்ப்பித்தார் முனிவர். சேஷ சயனம் இல்லாமல் நிலத்திலேயே சயனம் செய்ததால் "தல சயனப்பெருமாள்" எனும் திருநாமம் பெற்றார். நிலமகள் என்று அழைக்கப்படும் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பட்ட மஹிஷியும் இத்தலத்தில்

# நிலப் பிரச்சனையை நீக்கிடும் நிலமங்கைத் தாயார்

**திருமதி வைஷ்ணவி சேஷகிரி, திருப்பதி.**



நிலத்திலேயே அமர்ந்ததார். அதனால் தாயாருக்கும் "நில மங்கைத் தாயார்" எனும் திருநாமம் உண்டானது.



பொதுவாக ஸ்வாமியும் சரி, தாயாரும் சரி தங்களுடைய வாகனத்தின் மீதோ, பீடத்தின் மீதோ, தாமரை மலரின் மீதோ எழுந்தருள்வர். ஆனால், இத்தலத்தில் எம்பெருமானும், எம்பெருமாட்டியும் நிலத்திலேயே எழுந்தருளியுள்ளனர் என்பது கூடுதல் சிறப்பாகும். இங்கு உள்ள புஷ்கரணியை "புண்டரீக புஷ்கரணி" என்பர்.

மகாபலிபுர பேருந்து நிலையம் அருகிலே அமைந்துள்ள இந்தத் திவ்ய தேசம் வரலாற்று சிறப்புகள் நிறைந்தது. "மாமல்லை" என்று பூதத்தாழ்வாரும், "கடல் மல்லை" என்று திருமங்கை ஆழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். மல்லை என்றலே வளர்ச்சி, செழுமை என்று பொருள்படும்.



தமர் உள்ளம் தஞ்சை தலை அரங்கம் தண் கால்
தமர் உள்ளும் தண் பொருப்பு வேலை - தமர் உள்ளும்
மாமல்லை கோவல் மதில் குடந்தை என்பரே
ஏவல்ல எந்தைக்கு இடம் பேரு – இரண்டாம் திரு.70

அடியார்களின் பெருமையைப் பாடிய திருமங்கை ஆழ்வார் "தலசயனத் துறைவனைக் கொண்டாடும் நெஞ்சு உடையார் அவர் எங்கள் குலதெய்வமே..." என்று பாடியதில் இருந்தே ஆழ்வாருக்கு குலதெய்வமாகத் திகழ்ந்தவர் இந்த தலசயனப் பெருமாள் என்பதை அறியலாம்.



"மகாபலி"புரம் என்ற பெயரைக் கேட்டாலே நம் நினைவுக்கு வருவது மகாபலி சக்ரவர்த்தி. மகாபலி சக்ரவர்த்தி சிறந்த விஷ்ணு பக்தன். வாமனராக மகாபலியின் அகந்தை அழிக்க மூன்று அடி மண் கேட்டு, அவனை தன் மூன்றாவது அடிக்கு, பாதாள உலகிற்கு அழுத்தியது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

"மகாபலி"புரம், "தல"சயனப் பெருமாள், "நில"மங்கைத் தாயார் என்ற பெயர்களால் இத்தலம் நிலத்துடன் தொடர்புடையதாகவே அமைந்து உள்ளதை நாம் அறிய முடிகிறது. நில மகள் என்றதும் நம் நினைவுக்கு வருவது ஸ்ரீவராஹப் பெருமான் காப்பாற்றிய பூதேவி தானே. இவ்வாலயத்தில் பூமா தேவியையே காத்து தன் மீதே அமர்த்திக் கொண்டுள்ள ஸ்ரீவராஹப் பெருமானையும் தரிசிக்கலாம்.



தாயாரின் அருட்பார்வை இருந்தால் அங்கு பெருமாள் அருட்பார்வைக்கு அளவே இல்லை என்பர் வைணவச் சான்றோர். தாயார் அர்ச்சனைகளில் முதன்மையானது குங்கும அர்ச்சனை. தாயாருக்கு குங்கும அர்ச்சனை எல்லா ஆலயங்களிலும் நடைபெறுவது வழக்கம். இங்கு நில மங்கைத் தாயாருக்கு அர்ச்சனை செய்த குங்குமத்தை எடுத்துச் சென்று தானும் நெற்றில் அணிந்து, நம் வீட்டு வாசற்படியிலும் வைப்பதால் இல்லத்தில் சகல நன்மைகளோடு







ஐச்வர்யமும் நமக்குக் கிடைத்திடும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

நிலத்திற்கு உரிய கிரகம் செவ்வாய். செவ்வாய்க்கிழமை அன்று காலையில் ஆலயத் திற்கு வந்து பிரச்சனை உள்ள நிலம் தொடர்பான பத்திரத்தின் நகலின் நான்கு மூலைகளில் மஞ்சள் தடவி, அதனுடன் மஞ்சள், குங்குமம், ஒன்பது வெண்தாமரை (அல்லது நான்கு தாமரை மலர்கள்– இரண்டு ஸ்வாமிக்கு, இரண்டு தாயாருக்கு) மலர்களை ஸ்வாமி, தாயார் திருப்பாதங்களில் சமர்ப்பித்து, வேண்டிக் கொண்டால் அந்நிலத்தில் இருக்கும் பிரச்சனைகள் தீரும் என்று இங்குள்ள மக்களால் நம்பப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்புகளையும் தனனகத்தே கொண்டுள்ள திருக்கடல் மல்லை திவ்ய தேசத்திற்குச் சென்று பெருமாளுடன் தாயாரை சேவித்து, வாழ்வில் சகல வளங்களையும் பெறுவோம்.

















# அஷ்ட லக்ஷ்மிகளின் அருட்பார்வை

நம் தாய் தந்தையர்க்கும், குருவிற்கும், பெரியோர்களுக்கும் பாத பூஜை செய்து வணங்குவதன் மூலம், நாம் ஆதிலக்ஷ்மியின் அருளைப் பெறலாம். கணவன், குரு, பெரியவர்கள் ஆகியோரு டைய முழங்கால்களை, வலி தீர பிடித்து விடுவதாலும் கஜலக்ஷ்மி நம்மை நாடி வருகிறாள். மாறாக காலை நீட்டியபடி புத்தகத்தை வைத்துக் கொண்டு படிப்பதாலும், நெல், அரிசி, தானியம் இவை களைக் கால்களால் மிதிப்பதாலும், பால் கறக்கும்போது, பசுவினு டைய கால்களைக் கட்டிவிட்டுக் கறப்பது போன்றவை செய்தல் கூடாது. சாதுக்களையும், மகான்களையும் கேலி செய்வது தவறு. இடது தொடை மனைவிக்கு தான் சொந்தம். ஆகவே தன் மனைவியை விடுத்து, பிறன்மனை நோக்குவது தவறு. கெட்டுப் போன உணவு, எச்சில் உணவு, கல்லிருக்கும் உணவு இவைகளை ஏழைகளுக்கோ அல்லது வீட்டில் பெரியோர்களுக்கோ கொடுத்தல் கூடாது.

நெஞ்சிலே நஞ்சை வைத்து, பொய்யும், புறமும் பேசித் திரிவது கூடாது. பெண்கள் மாங்கல்யம் அணிவதும், அணிந்த மாங்கல்யம் நெஞ்சிலே தவழ்வதும் கணவனுடைய 'தைரியத்தை' வளர்க்கும் என்கிறார்கள். பொதுவாகவே, அனைவரும் கழுத்தில் துளசி மாலை, ருத்திராக்ஷம் அல்லது முத்துமாலை போன்றவற்றை அணிதல் வேண்டும். பெண்கள் பஞ்ச பூதங்களின் ஆசி பெற்ற தாலிக் கயிற்றை அணிவதே போதுமானது. 'சௌபாக்யலக்ஷ்மி' முகத்தில் வசிக்கிறாள். ஆதலால் பெண்கள் தங்கள் புருவங்களைத் திருத்தம் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால் கணவனுடைய ஆயுள் நிச்சயம் குறையும் என்பார்கள். அடுத்து, பெண்கள் ஒட்டுப் பொட்டு வைப்பது தவிர்த்து, மஞ்சளால் செய்த குங்குமத்தைத்தான் நெற்றியில் அணிந்து கொள்ள வேண்டும்.

தொகுப்பு - திரு. எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

# குறுக்கெழுத்துப் புதிர் -112

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | 2 | ■ |
| 3 | | | | | | | | | | | 4 |
| | 5 | | | | | | | | | 6 | ■ |
| | | 7 | 8 | 9 | | | | | | | |
| | | ■ | | | | | ■ | ■ | | | |
| | | | | | | | ■ | | | | |
| | | | | | | 10 | 11 | | | | |
| | | | | | | ■ | | 12 | | | |
| | | | | | 13 | | | | | | |
| ■ | | | ■ | | | 14 | ■ | ■ | | | |
| ■ | ■ | 15 | | | 16 | | | | 17 | | |
| ■ | | | | | | | | | | | 18 |

தொகுப்பு : திரு.டி.ஆர்.மனோகர், தஞ்சாவூர். 99426 44807

புதிருக்கு விடை அறிய 35ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

01. பரமபதத்தில் ஸ்ரீமந்நாராயண னுடன் அமர்ந்துள்ள பெருந் தேவி...(9)
03. காஞ்சி திருப்பாடகத்தில் உள்ள பாண்டவத் தூதரின் மனைவியர் ...(9)
05. ...(9) தலத்தில் பத்மாவதியாக, அலர்மேல் மங்கையாகத் தாயார் உள்ளார்
07. பத்ரீநாத் க்ஷேத்திரத்தில் லக்ஷ்மி தாயாரின் பெயர்...(8)
13. திருச்சானூரில் தாயார் அவதரித்த திதி...(4)
15. மூலவர் லோகநாயகியும், உற்சவர் அரவிந்தவல்லியும் ஒரே முக ஜாடையுடன் உள்ள தலம்...(9)

## வலமிருந்து இடம்

02. திருப்புளியங்குடியில் அருள்பவர் ..(3) மகள் நாச்சியார்.
04. உத்தமர் கோயில் எனும் திருக்கரம்பனூரில் ஆதி லக்ஷ்மியாக ...(3) தேவி.
14. திருவெள்ளறை திருத்தலத்தில் தாயாரின் பெயர் பங்கயச் ...(3)
18. திருவல்லா தலத்திலுள்ள "தனஸ்ரீ தளிர்" என்னும் தாயார்...(11)

## மேலிருந்து கீழ்

01. திருக்காட்கரையில் உள்ள அதிக தனத்தலைவி...(9)
05. ருக்மிணி பிராட்டி குடும்பத்துடன் கோயில் கொண்டுள்ள தலம்...(8)
06. பூமித்தாயார் ஸ்ரீராமரின் அருகில் அமர்ந்துள்ள தலம் திருப்...(9)
08. திருஆதனூரிலும் திருவரங்க நாயகியான ஸ்ரீ...6)
09. திருமாலின் திருமார்பு பிராட்டியாகத் திகழ்பவர்...(6)
11. பிரம்மோத்ஸவத்தின் போது சரஸ்வதி அலங்காரத்தில் எழுந்தருள்வது...(3) வாகனம்

## கீழிருந்து மேல்

10. திருக்குருகூரில் அருள்புரியும் தாயார்...(4) வல்லி.
12. குடந்தை சாரங்கபாணி மணந்துள்ள தாயார் ...(3) வல்லி.
15. குழந்தை வரம் வேண்டுவோருக்கு வறுத்தப் பயறை முளைக்க வைக்கும் தாயார் அருள்புரியும் திவ்யதேசம் ...(7)
16. பாற்கடலில் தாயாருடன் தோன்றிய சகலமும் அளிக்கின்ற மரம்...(7)
17. ஸ்ரீதேவி போன்று பூமிதேவி வடிவமெடுத்த திருப்பேரை ...(8) நாச்சியார்.
18. திருத்தண்கால் திருத்தலத்தில் அருள்பவர்...(9)

-பேராசிரியர் எஸ்.கோகுலாச்சாரி, புவனகிரி, 94434 39963

"திருவேங்கடக் கலம்பகம்" என்னும் நூலில் ஆச்சர்யமான பாடல் ஒன்று

பதின்மர் செந்தமிழைப் படிக்கிலாய் கேளாய்
படித்தபேர் தாளையும் பணியாய்,
எதிபதி சரணே சரணமென் றொருகால்
இசைக்கிலாய்,
எமது வேங்கடத்தைத் துதி செயாய்,
இருந்த இடத் திருந்தேனும் தொழுகிலாய்,
வாழி என் மனனே!
மதிநுதல் அலர்மேல் மங்கை நாயகனார்
மலர்ப்பதம் கிடைப்பது எவ்விதமே?

என்பது பாடல்.

இதை இயற்றியவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். மலையப்ப ஸ்வாமியின் அருள் பெற வேண்டும் என்று சொன்னால், ஆழ்வார்களின் பாசுரங்களைப் படிக்க வேண்டும். அப்படிப் படிக்க முடியாவிட்டால், படித்தவர்கள் திருவடிவாரத்தை வணங்க வேண்டும். பாஷ்யக்காரரான இராமாநுஜரை நினைக்க வேண்டும். திருவேங்கடத்தைத் துதி செய்ய வேண்டும். இருந்த இடத்தில் இருந்தாவது, திருமலை திக்கு நோக்கி வணங்க வேண்டும். இப்படியெல்லாம் இல்லாவிட்டால் மலையப்ப ஸ்வாமியின் அருள் எப்படிக் கிடைக்கும்? என்பது பாடலின் கருத்து. இது எளிதாக எல்லோருக்கும் விளங்கும்.



ஆனால், இதில் ஒரு நுட்பத்தை வைத்திருக்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார். மலையப்ப ஸ்வாமியின் அருள் கிடைக்க வழி என்று மட்டும் சொல்லி இருந்தால் பரவாயில்லை. ஒரு வார்த்தையைப் போடுகின்றார் பாருங்கள்.

மதிநுதல் அலர்மேல் மங்கை நாயகனார்
மலர்ப்பதம் கிடைப்பது எவ்விதமே?

பிறைச் சந்திரன்போன்ற அழகான நெற்றியை உடைய அலர்மேல் மங்கை நாயகனாகிய மலையப்ப ஸ்வாமியின் அருள் எவ்வாறு கிடைக்கும் என்கிறார்.

நுதல் என்பதற்கு முகம் என்ற பொருளும், புருவம் என்ற பொருளும் உண்டு. அவள் புருவம் வளைந்து எந்த இடத்தை நோக்குகின்றதோ, அந்த இடங்கள் மங்கலங்களால் நிறைகின்றன என்பது ஆசாரியர்கள் வாக்கு.

வைணவ சமயத்தின் மிக அடிப்படையான கருத்தை இதில் சுட்டிக்காட்டுகின்றார். மலையப்ப ஸ்வாமி என்கிற பெயர் கூட வரவில்லை. இன்னார் நாயகன் என்று பிராட்டியை முன்னிட்டு பெருமாளைக் காட்டுகின்றார்.

வைணவ மரபில் அடிப்படையான விஷயம் இது. ஸ்ரீ:யபதி என்றுதான் பெருமாளை அழைப்போம். அதை அழகான தமிழில் அலர்மேல் மங்கை நாயகன் என்று மொழிபெயர்த்திருக்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

குருபரம்பரை சுலோகங்களில் ஒன்று கூரத்தாழ்வான் இயற்றியது. எக்காலத்திலும் பொருத்தமான அந்த சுலோகம், பெருமாளை வேறு எந்த திருநாமத்தாலும் குறிப்பிடாமல் மகாலட்சுமியின் நாதன் என்று குறிப்பிடுகிறது.

# தாயாரின் அற்புத வைபவத்தில்...




**நாம் நம் பூஜை அறையில் தினமும் தூபதீபம் ஏற்றுவோம். அந்த தீப ஒளியைத் தினமும் 15 நிமிடம் பார்த்து வந்தால் பல நன்மைகளை அடையலாம். அந்த தீபத்தில் இருந்து வரும் ஒளியைக் கண் அசைக்காமல் பார்த்தல் வேண்டும். அப்படி பார்க்கும் போது, நமது மனதிற்கும், கண்களுக்கும் மிகவும் நல்லது. கிட்டப்பார்வை மற்றும் தூரப்பார்வை, கண் எரிச்சல் போன்ற பல நோய்கள் சரியாகும் என்றும் கூறுவர். எவ்வளவு மனம் பாரமாக இருந்தாலும் சரி குறைந்துவிடும் என்பர். பல பிரச்சனைகளுக்குப் பதில் கிடைக்கும் என்பது மிகப்பெரிய உண்மையாகும். நமக்கே தெரியாமல் அதில் இருந்து நிறைய சக்திகள் நமக்கு கிடைக்கும். அந்த சக்தி என்ன மாற்றத்தைத் தரும் என்பதை பற்றித் தெரிந்து கொள்வோம்.**

**1.மனக் கவலை தூள் படும். 2.முடிவு எடுக்கும் திறன் ஏற்படும். 3.கண்கள் புத்துணர்ச்சி பெறும். 4.நாம் புதிய தெம்புடன் காணப்படுவோம். 5.ஆசைகள் நம்மை அடக்குவது போய், நாம் ஆசைகளை அடக்கிவிடுவோம். 6.ஒரு புதிய மனிதராய் காணப் படுவோம். 7.ஒற்றைத்தலைவலி சரியாகும். 8.எதிர்மறை எண்ணங்கள் நீங்கி நேர்மறை ஆற்றல் பெருகிடும். 9. செல்வ விருத்தி ஏற்படும். 10. சகல காரிய வெற்றி சித்தியாகும்.**

*லக்ஷ்மி நாத சமாரம்பாம் நாத யாமுன மத்யமாம்*
*அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்*

ஒவ்வொரு வைணவனும் தினம் ஓதுகின்ற குரு பரம்பரைச் சுலோகம் லஷ்மி நாதன் என்றே தொடங்குகிறது.

பகவானை திருமகள் நாயகன், திருமகள் கேள்வன், திருவாழ் மார்பன் என்று தான் சம்பிர தாயத்தில் குறிப்பிடுவது வழக்கம்.

இதோ ஐப்பசி மாதம் வர இருக்கிறது. முதல் ஆழ்வார்களின் திருநட்சத்திர வைபவம் நடைபெற இருக்கிறது. முதலாழ்வார்கள் மூவரும் திருக்கோவ லூரில் எம்பெருமானைக் காண மிருகண்டு முனிவ ரின் ஆசிரமத்தின் இடைக்கழியில் ஒன்றாகக் கூடு கிறார்கள்.

இருட்டான மழை நேரத்தில், இரண்டு விளக்கு கள் ஏற்றி பெருமாளைக் காணும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். அந்த வெளிச்சத்தில் முதலில் அவர்கள் கண்டது பெரிய பிராட்டியாரான மகாலட்சுமியைத்தான். அதனால்தான் மூன்றாம் ஆழ்வார் (பேயாழ்வார்) அந்தாதியைத் தொடங்கு கின்ற பொழுது *''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்''* என்று தொடங்குகிறார். *''ஹிரண்ய வர்ணாம் ஹரிணீம் ஸ்வர்ண''* என்கின்ற ஸ்ரீ சூக்தத்தின் எதிரொலி இந்தப் பாசுரம். திருவைக் கண்ட பிறகுதான் “மாலைக்” காண முடியும் என்பது வைணவ மரபு. பூவும் மணமும், வீணையும் நாதமும் போலப் பெருமாளையும் தாயாரையும் சேர்த்து த்வய வைபவமாகத்தான் பார்க்க வேண்டும்.

பிராட்டியின் சம்பந்தம் முக்கியம். அவள் சேர்த்தியால் காகாசுரன் தலை தப்பித்தான். அது இல்லாமையால் இராவணன் முடிந்தான் என்று ரகசிய நூலில் சுட்டிக் காட்டப்படும்.

இந்திர குமாரனான ஜயந்தன் எனப்படும் காகாசுரன், பிராட்டியைத்தொட்டுத் துன்புறுத்தும் மிகப்பெரிய அபச்சாரம் செய்தான். அவனை பெருமாளின் பிரம்மாஸ்திரம் துரத்தியது. மூன்று உலகங்களுக்கும் ஓடினான். அவனைக் காப்பாற்று வதற்கு யாருமே இல்லை. வந்து விழுந்தான். அப்பொழுது அவன் செய்த அபசாரத்தைப் பொறுத்துக்கொண்டு, அவன் தலையைத் திருப்பி, இராமனின் திருவடியில் சரணாகதி செய்ய வைத்து தப்பிக்க வைத்தாள் பிராட்டி. ஆனால், இராவணன் இத்தகைய அபசாரத்தைச் செய்யாமல்

இருந்தாலும், இராம இராவண யுத்தத்தின் பொழுது, அவள் அருகாமையில் இல்லாததால், இராவணன் முடிந்து போனான். எந்த உயிரும் கடைத்தேற வேண்டும் என்று சொன்னால் அங்கே பிராட்டியின் சேர்த்தி இருக்க வேண்டும்.

இதை இராமாயணத்தில் காணலாம். மறைந்திருந்து தன்னை இராமன் மாய்த்து விட்டான் என்பதைத் தெரிந்து கொண்ட வாலி, "இராமா, பரம்பொருளாகிய நீயே இப்படிச் செய்யலாமா?" என்று பலவாறு அவனிடத்திலே நியாயத்தைக் கேட்டு, அவனாகவே ஒரு முடிவுக்கு வருகின்றான்.

ஒருவேளை சீதை உன் அருகில் இருந்திருந் தால் என் தலை தப்பித்து இருக்கும். அவள் இல்லாமையினால், உன்னால் நான் தண்டிக்கப் பட்டேன் என்கிறான்.

*கோ இயல் தருமம் உங்கள்*
*குலத்து உதித்தோர்கட்கு எல்லாம்*
*ஓவியத்து எழுத ஒண்ணா*
*உருவத்தாய்; உடைமை அன்றோ?*
*ஆவியை, சனகன் பெற்ற*
*அன்னத்தை அமிழ்தின் வந்த*
*தேவியைப் பிரிந்த பின்னை*
*திகைத்தனை போலும் செய்கை.*

ஒரு ஆன்மாவின் மீது, பகவானுக்கு கோபம் எழாமல் காப்பவள் அன்னை. பிராட்டியின் புருஷகாரம் இல்லாவிட்டால், பெருமாளின் தண்டனையில் இருந்து தப்ப முடியாது,

சேதனனை அருளாலும், பெருமாளை அழகாலும் திருத்துபவள் பிராட்டி. அருளையும் அழகையும் ஒருசேர அலர்மேல் மங்கையின் சன்னிதானத்தில் தரிசிக்கலாம்.

## அறிந்து கொள்வோம்! (துளசி)



**துளசி செடியிலிருந்து இலையைப் பறிப்பதற்கு முன் சொல்ல வேண்டிய மந்திரம்**

***துளசி அம்ருதஜன்மாஸி ஸதா த்வம் கேசவப்ரியே***

***கேசவார்த்தம் லுனாமி த்வாம் வரதா பவ சோபனே***

**பொருள்: திருமாலுக்குப் பிரியமான துளசியே, உன்னை திருமாலுக்குச் சமர்ப்பணம் செய்வதற்காகப் பறிக்கிறேன், நீ எனக்கு அருள்புரிவாயாக என்பது இதன் அர்த்தமாகும்.**

**துளசி பூஜை எதற்காக?**

**துளசியின் அடிப்பாகத்தில் 33 கோடி தேவர்கள், 12 சூரியர்கள், 8 வசுக்கள், 2 அசுவினி தேவர்கள் ஆகியோர் இருக்கின்றனர். துளசி இலையின் நுனியில் பிரம்மன், நடுவில் மகாவிஷ்ணு, லட்சுமி, பார்வதி, சரஸ்வதி, காயத்திரி முதலானோர் வசிப்பதால், வீட்டில் துளசி மாடம் வைத்து, தினமும் காலையும், மாலையும் விளக்கேற்றி, பிரதட்சணம் செய்து வழிபட வேண்டும்.**

**எந்தெந்த நாட்களில் துளசியைப் பறிக்கக் கூடாது?**

**திருவோண நட்சத்திரம், சப்தமி, அஷ்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, தமிழ் மாதப்பிறப்பு போன்ற நாட்களில் துளசி இலையைப் பறிக்கக் கூடாது. அந்நாட்களில் உங்களுக்கு துளசி தேவைப்பட்டால் அதற்கு முந்தைய நாள் காலையிலேயே பறித்து வைத்து கொள்ள வேண்டும். மேலும், மாலை மற்றும் இரவு நேரங்களில் துளசியைப் பறிக்கக் கூடாது.**

**தொகுப்பு - திரு. எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

திருமலைக்குச் செல்கின்ற போது முதலில் பிராட்டியின் சன்னிதானமான திருச்சுகனூர் என்று வழங்கப்படும் திருச்சானூர் சென்று அலர்மேல் மங்கையின் ஆசிகளைப் பெற்று, பின் மலையப்ப ஸ்வாமியைத் தரிசியுங்கள் என்பார்கள். அப்படியும் நேரடியாக தரிசித்தால், தரிசிக்கும் அன்பர்களுக்கு எக்குறையும் வந்து விடக் கூடாது என்பதற்காக, பெருமாளின் திருமார்பிலே அகலாது அமர்ந்திருக் கிறாள் அன்னை அலர்மேல் மங்கை.

நம்மாழ்வார் பெருமாளைக் குறிப்பிடும் பொழுது "அலர்மேல் மங்கை உறை மார்பன்" என்று அழைத்து, பெருமாளின் திருவடிகளில், *''புகல் ஒன்றும் இல்லாத அடியேன் உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே''* என்று சரணடைகிறார்.

வைணவ மரபில் மூன்று மகா மந்திரங்கள் உண்டு. அதில் த்வய மகாமந்திரத்தை மந்திரரத்னம் என்று அழைப்பார்கள்.உயிர் காக்கும் கவசம் என்பார்கள். இந்த மந்திர ரத்னத்தின் விளக்கம்தான் நம்மாழ்வாரின் சரம பிரபந்தமான திருவாய்மொழி.

இரண்டு வாக்கியங்களால் 25 எழுத்துக்களால் உருவான இந்த மந்திரத்தின் சாரமான பொருள், மகாலட்சுமித் தாயாரை முன்னிட்டுக் கொண்டு பெருமாளை சரண் புக வேண்டும். இருவர் சேர்த்தியில் கைங்கரியம் செய்ய வேண்டும்.

சுவாமி நம்மாழ்வார், தம்முடைய திருவாய் மொழியைத் துவங்குகின்ற பொழுது உகாரத்தில் *''உயர் வற உயர்நலம் உடையவன்''* என்று தொடங்குகின்றார். இந்த உகாரம் மகாலட்சுமித் தாயாரைக் குறிக்கிறது.

பெருமாளுக்கு உரிய அத்தனை ஏற்றமும் பிராட்டிக்கும், பிராட்டிக்குரிய அத்தனை வைபவங் களும் பெருமாளுக்கும் பொருந்தும். பராசர பட்டர் இயற்றிய குணரத்ன கோசம் என்கின்ற நூலிலே பிராட்டியின் வைபவம் பரக்கச் சொல்லப்படுகிறது.

"திருமலை" என்று பெருமாளின் திருத் தலத்தைச் சொல்லுகின்றோம். அதில் உள்ள "திரு" என்கிற சப்தமே பிராட்டி தானே! இத்தனைச் சிறப்பு மிகுந்த, அலர்மேல் மங்கைக்காகவே அவதாரம் எடுத்த, அலர்மேல்மங்கை நாயகனின் பிரம்மோற்சவம் முடிந்த கையோடு, அலர்மேல் மங்கையின் பிரம்மோத்சவம் கார்த்திகையில் தொடங்குகிறது.

"திருக்கண்டேன்" என்று திருமகளைத் தரிசித்து முதல் பாசுரமிட்ட பேயாழ்வார், அந்தாதியை நிறைவு செய்யும் பொழுது திருமகளோடுதான் நிறைவு செய்கின்றார். "திரு" என்கிற சப்தத்தில் ஆரம்பித்து "திரு" என்கிற சப்தத்தில் முடிகிறது மூன்றாம் திருவந்தாதி.

*சார்வு நமக்கென்றும் சக்கரத்தான், தண்டுழாய்த்*
*தார்வாழ் வரைமார்பன் தான்முயங்கும், காரார்ந்த*
*வானமரு மின்னிமைக்கும் வண்டா மரைநெடுங்கண்,*
*தேனமரும் பூமேல் திரு.* – பேயாழ்வார்

"தேனமரும் பூமேல் திரு" என்றால் அலர்மேல் மங்கைத் தாயார்தானே.

**திருச்சானூரில் திருவேங்கடமுடையானின் பட்டத்து மகாராணியான அலர்மேல் மங்கைத் தாயார் பிரம்மோத்ஸவத்தில் ஆறாம் நாள் மாலையில் நடைபெறும் தங்கத்திருத்தேர் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மாலை நேரத்தில் ஆதித்யனின் ஒளிக்கதிர்கள் தங்கத்திருத்தேரின் மீது பட்டு ஜொலிக்க, மாதர்கள் தங்கள் உள்ளத்தின் இதயராணியான வரங்களை அளிக்கும் வரலக்ஷ்மியான ஸ்ரீபத்மாவதித் தாயாரின் திருத்தேரை நான்கு மாட வீதிகளில் வடம் பிடித்து இழுப்பது கண் கொள்ளாக் காட்சியாக அமையும்.**





# கைசிக மாஹாத்மியம்

– திரு.ஆர்.கண்ணன்,
பெங்களூரு, 93435 83416

எம்பெருமானிடமே மனதை நிலைநிறுத்தி அவன் திருச்செவி சாய்க்க கைசிக பண்ணில் பாடல்களை, கார்த்திகை சுக்ல பக்ஷ ஏகாதசி இரவு பாடிப் பெருமை பெற்ற நம்பாடுவான் என்னும் பக்தனுடைய சரித்திரமே கைசிக மாஹாத்மியத்தில் விவரிக்கப்படுகிறது. இது வராஹ புராணத்தில் அடங்கிய கைசிக புராணத்தில் நன்றாக விளக்கப்பட்டுள்ளது.

முன்பு ஒரு காலத்தில், பூமியானது பிரளய சமுத்திரத்தில் அழுந்திக்கிடந்தது. அப்போது எம்பெருமான் வராஹவதாரம் செய்து சமுத்ரத்தின் உட்புகுந்து பூமா தேவியை மீட்டான். அது சமயம் பூமா தேவியானவள், ஜனங்கள் சம்சாரமாகிய பெரும் சமுத்ரத்தினின்று கரையேற வராஹப் பெருமாளிடம் உபாயம் கேட்டாள். எம்பெருமானும் “தன்னைப் பாடி ஸந்தோஷிப்பித்தால் சம்சார சாகரத்தைக் கடக்கலாம் என்று கானரூபமான உபாயத்தை, நம்பாடுவான் என்ற பாகவத ச்ரேஷ்டனுடைய சரித்திரத்தை அருளிச் செய்தான்”. ஆகவே இந்த கைசிக மாஹாத்மியம் எம்பெருமான் திருவாக்கிலிருந்து அருளிச் செய்யப் பட்டதாகையால் மிகவும் ஏற்றமுடையது.

திருக்குறுங்குடி (தற்போதைய திருநெல்வேலிக்கு அருகில் உள்ளது) என்னும் திவ்ய தேசத்தில் ஸுந்தர பரிபூர்ணன் – அதாவது வடிவழகிய நம்பி என்ற திருநாமத்துடன் எம்பெருமான் நித்யவாஸம் செய்கிறான். அவ்வூரில் பாகவதோத்தமன் வசித்து வந்தான். அவன் எம்பெருமான் மீது இனிமையாகப் பாடவல்லவன். அவன் நாள்தோறும் இரவில் வீணையுடன் எம்பெருமான் கோயிலுக்குச் சென்று எம்பெருமான் விஷயமான பாட்டுக்களில் இனிய ராகங்களை இசைத்து பகவானை சந்தோஷப்படுத்துவதையே வாழ்க்கையாகக் கொண்டு இருந்தான். அதனாலேயே அவனுக்கு ‘பாடுவான்’ என்றே பெயர் நிலைத்தது. எம்பெருமானும் அவனை

ஏகாதசி என்பது அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களினின்றும் பதினோராம் நாள். இதற்கு பெரிய மஹத்வம் உண்டு. இந் நாட்களில் உபவாஸமிருந்தால் எம்பெருமானின் உகப்புக்கு ஆளாகி, சிறந்த நன்மைகளை அடையலாம் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஏகாதசி தினத்தை ஹரி வாஸரம் அதாவது ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தினம் என்றே பெரியோர்கள் கூறுவர். விரதங்களில் ஏகாதசி விரதம் மிகவும் முக்கியமானது; அது மட்டும் இன்றி தவிர்க்க முடியாதது என்பது பூர்வர்களின் முடிவு.

இப்போது நாம் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி போன்று மிகவும் முக்கியமான கைசிக ஏகாதசியைச் சற்றே அநுபவிப்போம். கைசிகம் என்பது ஒரு பண் – அதாவது ராகம் போன்றது. எம்பெருமானுக்கு இந்த ராகத்தில் ஸ்தோத்ரங்களையோ, பாசுரங்களையோ கேட்பதில் மிக ப்ரீதி. அப்படிப்பட்ட கைசிக பண்ணில் பாடிய பாட்டால் ஒரு பிரம்ம ராக்ஷஸன் பாபத்தில் இருந்து விடுபட்ட சரித்திரமே கைசிக மாஹாத்மியம் என்று கூறப்படுகிறது.

'நம்பாடுவான்' என்று திருநாமமிட்டு அவன்மேல் தன் கடாக்ஷத்தைப் பொழிந்து வந்தான்.

ஒரு சமயம் கார்த்திகை மாஸம் சுக்ல பக்ஷம் ஏகாதசி அன்று இரவு, வீணையும் கையுமாய் எம்பெருமான் திருக்கோயிலுக்குப் புறப்பட்டான். வழியில் அவனை ஒரு பிரம்மராக்ஷஸன் பிடித்துக் கொண்டு, தனக்கு ஆஹாரமாக வேண்டும் என்று கூறினான். நம்பாடுவான், தான் கொண்டிருக்கும் ஏகாதசி விரதத்தைக்கூறி, எம்பெருமானை தன் பாட்டுக்களால் சந்தோஷப்படுத்திவிட்டு, திரும்பி வருகையில் தன்னை ஆஹாரமாகக் கொள்ளலாம் என்று பணிவுடன் கூறினான்.

ஆனால், பிரம்ம ராக்ஷஸனோ அவன் தப்பிச் செல்ல வழி பார்க்கிறான் என்று அதனை ஏற்க மறுத்தான். அப்போது நம்பாடுவான் பல ப்ரதிஜ்ஞை செய்து தான் சொல்வது சத்யமே என்று உறுதிப்படக் கூறினான்.

"நான் திரும்பி வரவில்லையாகில் பல பாபங்கள் செய்ததின் பலனை அடைவேனாக" என்று உறுதி அளித்தான். பிரம்மராக்ஷஸனும் அவனுடைய ப்ரதிஜ்ஞைகளை ஏற்று அவனை விடுவித்தான். நம்பாடுவானும் நம்பியின் திருக்கோயிலுக்குச் சென்று அன்று இரவு முழுவதும் தன் வீணா கானத்தால் எம்பெருமானை உகப்பித்து, பிரம்ம ராக்ஷஸன் இருக்குமிடத்திற்குப் புறப்பட்டான்.

எம்பெருமான் மாற்றுருவில் வந்து நம்பாடுவானை பிரம்மராக்ஷஸனிடம் செல்ல வேண் டாம் என்று தடுத்து அவனுடைய உறுதியைச்

**திருப்பதியில் அலிபிரி பாதாள மண்டபம் அருகில் "ஸப்த கோ" பிரதக்ஷிணை மந்திரம் அமைந்துள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தானம் பசுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது அனைவரும் அறிந்ததே. "கோயிலுக்கு ஓர் கோமாதா" திட்டம் அதற்கு ஓர் சான்றாகும்.**

**ஏழு மலைகளின் அடையாளமாக ஏழு பசுக்கள் அவற்றின் கன்றுகள், வேணு கோபால ஸ்வாமி விக்ரஹம், "கோ" பூஜை, "கோ" தரிசனம் குறிப்பாக ஸ்ரீவேங்கடேஸ்வரா ஸப்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தில் நிறுவப்பட்டுள்ளன.**

**தேவர்கள் பாற்கடலை கடைந்தபோது அமிர்தத்துடன் கல்ப விருக்ஷம், காமதேனு, மகா லட்சுமியும் வெளிப்பட்டனர். காமதேனுவின் சந்ததியே பசுக்களாகும். இவ்வுலகில்**



**காமதேனுவின் மூலமாகத்தான் கால்நடை இனமே தோன்றியதாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்த கோ பிரதக்ஷிணை மந்திரத்தை தரிசித்தால் கிரஹ சாந்தி கிட்டும். பக்தர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பசுக்களின் எடைக்கேற்ப துலாபார சேவை மூலமாக பணம், உணவுப்பொருட்கள், மாட்டுத் தீவனங்கள் தானம் செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஸப்த கோசாலையில் கோவிந்தனைத் தரிசித்து, கோபிரதக்ஷிணம் செய்த பின்னர் மலை ஏறத்தொடங்கலாம்.**



# ஸப்த "கோ" பிரதக்ஷிணை மந்திரம்



சோதித்தான். நம்பாடுவானோ பிரம்மராக்ஷஸ னிடம் தன்னை ஒப்படைப்பதிலேயே உறுதியாக இருந்தான். எம்பெருமானும் அவனை வாழ்த்தி அனுப்பினான்.

நம்பாடுவானும் பிரம்மராக்ஷஸன் இருந்த விடம் வந்து, தன்னை ஆஹாரமாகக் கொள்ளும் படி வேண்டினான். அப்போது அவன் பெருமை அறிந்த பிரம்மராக்ஷஸன், தன் பாபம் நீங்கி க்ஷேமம் அடைய, இரவில் நம்பியைப் பாடிய பாட்டின் பலனைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டி நம்பாடுவானைச் சரணடைந்து எப்படியாவது தன்னை பாப விமோசனம் செய்ய வேண்டும் என்று வேண்டினான். மேலும், தான் பிரம்ம ராக்ஷஸனாக ஆகியதின் வரலாற்றையும் கூறினான்.

முன் பிறவியில் ஸோம சர்மா என்ற அந்தண னாக இருந்தேன். தனக்குரிய யாகம் செய்யும்போது தவறு இழைத்து இருந்தேன். மேலும், யாகத்தின் நடுவிலேயே இறக்க நேரிட்டது. அதன் காரணமாகவே பிரம்ம ராக்ஷஸனாகி அதிகோரமானப் பசியுடன் எங்கும் திரிந்து கொண்டிருக்கின்றேன் என்றான். நம்பாடுவான் பிரம்ம ராக்ஷஸனிடம் மனம் இரங்கி, கைசிகம் என்னும் பண்ணை–ராகத்தை வைத்துப் பாடிய ஒரு பாட்டின் பலனை அளிக்க, அத்தால் அந்த பிரம்ம ராக்ஷஸன் தன் பாபங்கள் நீங்கியவனாய், நற்கதி அடைந்தான்.

ஆகையால் சம்சார சாகரத்தினின்றும் கரையேற எம்பெருமானை ஸந்தோஷப்படுத்துவதே சிறந்த உபாயம் என்று இந்த சரித்திரத்திலிருந்து நன்கு தெளிவாகிறது. இப்படி நம்பாடுவான் கைசிக ஏகாதசி விர தத்தைப் பற்றி அருளிச்செய்துவிட்டு, எம்பெருமான் பூமி தேவியைப் பார்த்து “எவன் ஒருவன் கார்த்திகை மாஸத்து சுக்லபக்ஷ துவாதசி (ஏகாதசிக்கு மறு நாள்)நம்முடைய சந்நிதி முன்பு வந்து இந்த கைசிக மாஹாத்மியத்தை வாசிக்கிறானோ, கேட்கிறானோ அவன் க்ரமமாக ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்து,



**நம்பாடுவான் ப்ரதிஜ்ஞையில் குறிப்பிட்ட பாபங்களில் சில:**

- கொடுத்த வாக்கை மீறுதலால் ஏற்படும் பாபம்.
- மாற்றான் பத்னியைப் புணர்தலால் ஏற்படும் பாபம்.
- தன்னோடு உடன் உண்பவனுக்கும் உணவில் ஏற்றத் தாழ்வு செய்தலாகிய பாபம்.
- அந்தணனுக்கு பூமி தானம் செய்து விட்டு அதனை அபஹரிக்கும் பாபம்.
- அழகுள்ள பெண்ணை மணந்து அவளை அநுபவித்துவிட்டு கைவிடுதலாகிய பாபம்.
- உணவிட்டவனை பலபடியாக நிந்திக்கும் பாபம்.
- வாக்களித்தபடி தானம் செய்ய மறுக்கும் பாபம்.
- நண்பன் மற்றும் குரு இவர்களின் மனைவிகளைக் காமபீடித்தானாகி புணர்தலாகிய பாபம்.
- தாகத்துடன் தண்ணீர் குடிக்க வரும் பசுக்கூட்டங்களை விரட்டி அடித்தலாகிய பாபம்.
- ப்ரஹ்மஹத்தி செய்தவனுக்குரிய பாபம்.
- எம்பெருமானை விட்டு இதர தேவதைகளை மோக்ஷ உபாஸனமாக எண்ணுவதால் உண்டாகும் பாபம்.
- ஸ்ரீமந்நாராயணனோடு மற்றைய கீழ் தேவதைகளோடு சமமாக எண்ணுவதாகிய பாபம்.



*திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி*

## திருமலைக்கு நடந்து செல்லும் பக்தர்களின் கவனத்திற்கு

- **60 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, வலிப்பு, கீல்வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோர் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **இதயத்தில் ஸ்டென்ட் பொருத்தப்பட்டவர்களும், பருமனானவர்களும் மலை ஏறுவதைத் தவிர்க்கவும்.**
- **மலை ஏறும்போது ஏற்படுகின்ற மன அழுத்தம் மற்றும் மிக உயரத்தில் குறைவான ஆக்சிஜன் செறிவும் இதய பாதிப்பு மற்றும் ஆஸ்துமாவை மேலும் மோசமாக்கலாம்.**
- **நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் தாங்கள் வழக்கமாக பயன்படுத்தும் மருந்து களை தவறாமல் தங்களுடன் கொண்டு வருதல் வேண்டும்.**
- **மருத்துவ உதவி தேவைப்படும் பட்சத்தில் அலிபிரி நடைபாதையில் உள்ள படி எண். 1500 காலி கோபுரம் மற்றும் இராமானுஜர் சன்னதி அருகில் உள்ள மருத்துவ மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.**
- **திருமலையில் 24/7 மணி நேரமும் அஸ்வினி மருத்துவமனை மற்றும் முதலுதவி மையங்கள் செயல்படுகின்றன.**
- **நாள்பட்ட சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களுக்கு அவசர டயாலிசிஸ் மருத்துவ சிகிச்சைக்கு திருப்பதி ஸ்விம்ஸ் மருத்துவமனையும் உள்ளது.**

நமக்குப் பல்லாண்டு பாடிக்கொண்டு ப்ரஹ்ம அனுபவத்தை அநுபவித்துக் கொண்டு இருப்பான்" என்று இதற்குப் பல ச்ருதியைத் தானே திருவாய் மலர்ந்தருளினான். கைசிக புராணத்துக்கு ஸ்ரீ பராசர பட்டர் அருளிச் செய்த வ்யாக்யானம் லோக ப்ரஸித்தி பெற்றது. அந்த வ்யாக்யானத்துடனேயே கைசிக புராணம் திருக்கோயில்களில், க்ருஹங்களில் அநுஸந்திக்கப்படுகிறது

இந்த கைசிக புராணம் இன்றளவும் பல திவ்ய தேசங்களில் கைசிக ஏகாதசி இரவு மற்றும் மறுநாள் காலையில், அதற்கு உரிமை பெற்றவர்களால் ஓதப்படுகிறது.

திருமலையில் கைசிக துவாதசிக்கு அன்று விடியற்காலையில் சூரியோதயத்திற்கு முன்னதாக, மூலஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் உக்ர ஸ்ரீநிவாஸ மூர்த்தி நான்கு மாடவீதிகளிலும் திருவீதி உலா வருவது சிறப்பானது. இந்த மூர்த்தி வெளியில் திருவீதி உலா வருவது இந்நாளில் மட்டும்தான். இந்த மூர்த்தியை சூரியோதயத்திற்கு முன் சேவிக்கும் பாக்யமுடைய அடியார்கள் பாபங்கள் எவ்வளவு உக்ராமாயிருந்தாலும் (கடுமையாய் இருந்தாலும்), அவைகள் முற்றும் கழிந்துவிடும் என்பது பெரியோர்களின் முடிவு.

கைசிக புராணக்கதை திருக்குறுங்குடியில் கைசிக ஏகாதசி இரவு முழுவதும் நாடகமாக நடித்துக் காண்பிக்கப்படுவது கண்கொள்ளாக் காட்சி. இதில் நடிப்பவர்கள் ஒரு மாதம் முன்பிருந்தே விரதமிருந்து இதில் பங்கு கொள்வார்கள் என்று அங்கிருப்பவர்கள் கூறுகின்றனர்.

இப்புராணத்தினின்றும், கானரூபமான கைங்கர்யம் பெருமானுக்கு மிகவும் உகந்தது; ஏகாதசி விரதம் விரதங்களில் சிறந்தது மற்றும் சரணாகதி எல்லாவற்றையும் சாதித்துக் கொடுக்கும் என்ற விஷயங்களை நாம் தெளிகிறோம்.

### 2025, டிசம்பர் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 01 | ஸ்ரீகீதா ஜெயந்தி, |
| 02 | ஸ்ரீசக்ர தீர்த்த முக்கோட்டி |
| 03 | ஸ்ரீஅனுமத் விரதம் |
| 03 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி கார்த்திகை தீபோத்ஸவம் |
| 04 | திருமலையில் கார்த்திகை தீபோத்ஸவம், கபில தீர்த்த முக்கோட்டி, திருமங்கை ஆழ்வார் சாத்துமுறை |
| 05 | திருப்பாணாழ்வார் திருநட்சத்திரம் |
| 07 | கபில தீர்த்த ஆலயத்தில் லக்ஷ பில்வார்ச்சனை |
| 16 | மார்கழி மாதம் ஆரம்பம் |
| 30 | வைகுண்ட ஏகாதசி |



# மகாலட்சுமி துதிப்பாடல்

கருணைக்கடலே கற்பனைக்கு எட்டா கனியமுதே
காலத்தால் அழியா பரம் தேவியே
பாற்க்கடலில் உதித்த பெரும் தேவியே
அன்புக்கு வித்தாகி அனைத்துலகம் காத்தவளே

கண்ணில் தெரியா காவிய தேவியே
அதர்மம் அழித்து லங்கையைக் காத்தவளே
அனுமன் தொண்டிற்கு அகம் மகிழ்ந்த தேவியே
மண்ணுயிர் காத்து மனம் கவர்ந்த தேவியே

மா மனித ராமனை மணந்த தேவியே
மனித குலம் காக்க சீதையாகச் சிறை சென்றவளே
தனக்கு நிகர் இல்லா சக்தி படைத்தவளே
இல்லற வாழ்வில் இணைபிரியா தேவியே

தன்னை சார்ந்தவர்க்கு தன் குணம் கொடுத்தவளே
வெற்றிக்கு வித்தாகும் வேத தேவியே
வேந்தன் வீரம் காக்க தான் கோழைபோல் நின்றவளே
கற்பக விருட்சமே கருணை தேவியே

பக்தர் போற்றும் பரமன் தேவியே
பாவையர் போற்றும் பராசக்தியே
தாய்மை தன்மைக்கு மேலான தேவியே
மகான்கள் போற்றும் மகத்தான தேவியே

பிரளய காலத்திலும் பிரியா தேவியே
பக்தனை பித்தாய் ஞானச்சுடராய் ஆக்குபவளே
வீரத்தை வெளிக்காட்டா தேவியே
பார் புகழும் பவித்திர தேவியே

காட்டில் வாழ்ந்த கருணை தேவியே
மன்னவன் இன்பம் துன்பம் பகிர்ந்த தேவியே
இல்லற துறவி அடைந்த தேவியே
அகம் மகிழ அன்பு கொண்ட தேவியே

அனைத்து மனங்களையும் கவர்ந்த தேவியே
உள்ளம் உருகும் அன்பு படைத்த தேவியே
அனுகாதவர்க்கு பிணியே அனுகியவர்க்கு மருந்தே
பிறவிப் பிணியைப் போக்கும் அரும் மருந்தே தேவியே
உள்ளே அனைத்துமாக ஒளிரும் தேவியே
ஒளியே ஒளிக்கு அளவில்லா தேவியே
ஒளிர்கின்ற ஒன்பதும் மிளிர்கின்ற தேவியே
மாண்புமிக்க மகத்தான தேவியே

கணவனை நெஞ்சில் சுமந்து தன் மக்களை காத்தவளே
தன் உயிர் போக்கி தன் மானம் காத்தவளே
சோக வாழ்க்கையை சுகம் என்று எண்ணியவளே
சொந்த பந்தம் துறந்து ரகுகுலம் காத்தவளே

நாளைய உலகம் அமைதி பெற நன்மைகள் பல செய்தவளே
நான் மறை வேதம் போற்றும் தர்மநீதி தேவியே
கற்பு நெறி காத்து கலங்காது நின்ற தேவியே
அரச வாழ்வை துறந்து அறவழியில் நின்றவளே

அன்புக்கு வித்தாகி அனைத்துயிரையும் காத்தவளே
அறம் தழைக்க அனைத்து உலகையும் காத்தவளே
பெரும் துன்பம் அடைந்து பெண் இனம் காத்தவளே
ஆதி அந்தமாய் சத்தியத்தை காத்தவளே

முக்திக்கு வித்தாகும் மூத்த தேவியே
பக்தனை பதம் சேர்க்கும் புருஷகார தேவியே
அழியா முக்தியின் ஆனந்தமே பரமானந்தமே
ஓம் மகா லட்சுமியே போற்றி போற்றி

வந்தேன் அன்னையே உன் சரணபாதம்
பற்றினேன் என்னை ஒரு குழவி போல்
காப்பாய் அன்னையே கருணை தேவியே போற்றி போற்றி

**திரு. பி. செல்வகுமார் இராமாநுஜ தாசன்,**
**கீழ்புத்தூர், 77080 89783.**



திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித்தாயார்
லக்ஷ குங்குமார்ச்சனை (16-11-2025)



24-09-2025 முதல் 02-10-2025 வரை
பிரம்மாண்டமாக நடைபெற்ற
திருமலையப்ப ஸ்வாமி
பிரம்மோத்ஸவத் திருக்காட்சிகள்



உபயநாச்சிமார்களுடன் ஸ்ரீஉக்ர ஸ்ரீநிவாசமூர்த்தி
(02-11-2025, திருமலையில் கைசிக துவாதசி)







# புண்ணியம் தரும் குங்குமார்ச்சனை

**திருமதி பா.கவிதா,**
**சிதம்பரம், 98425 50844.**

ஆன்மீகம், அறிவியல் என்பது நம் நாட்டின் இரு கண்கள் என்று கூறினால் மிகை அல்ல. ஆன்மீகத்தில் செய்யப்படும் ஒவ்வொரு விஷயங்களிலும் அறிவியலும் கலந்து இருக்கிறது என்பதை மறுத்து விட முடியாது. ஏனென்றால் நம் முன்னோர்கள் அறிவியலை ஆன்மீகத்தோடு இணைத்துதான் ஒவ்வொரு விஷயங்களையும் நமக்கு செய்து கொடுத்திருக்கிறார்கள்.

குங்குமம் என்பது அர்ச்சனைக்குப் பயன்படுத்தப்படும் மிகவும் புனிதமான பொருள். குங்குமம் சிவன், சக்தி, லட்சுமி போன்ற தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்யப்படும் போது பல ஆன்மீக, ஆரோக்கிய, மனநல நன்மைகளை அளிக்கிறது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

நாம் தினமும் பயன்படுத்தும் தெய்வீகப் பொருட்கள் என்னும் வரிசையில் விபூதி, குங்குமம், மஞ்சள், சந்தனம் போன்ற பொருட்களும் வரும். அவற்றுள் மிகவும் முக்கியமானப் பொருளாகக் கருதப்படுவது குங்குமம். விபூதி எப்படி சிவனுக்கு உகந்த பொருளாகக் கருதப்படுகிறதோ அதேபோல் அம்பாளுக்கு உகந்த பொருளாக குங்குமம் கருதப்படுகிறது. யார் ஒருவர் நெற்றியில் குங்குமம் இருக்கிறதோ அவர்களை எளிதில் வசியம் செய்ய முடியாது என்றும் தாந்த்ரீக ரீதியாகக் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட குங்குமத்தை நாம் வீட்டிலேயே அம்பாளுக்கு அர்ச்சனை செய்து வழிபாடு மேற்கொண்டு அதன் சக்தியை மேலும் அதிகரிக்கலாம்.

பொதுவாக வெள்ளிக்கிழமை பிரம்ம முகூர்த்த நேரத்திலும், சுக்கிர ஹோரையிலும், ராகு காலத்திலும் அம்பாளுக்கு குங்கும அர்ச்சனை செய்யலாம். சுக்கிர ஹோரையில் அர்ச்சனை செய்யும் பொழுது மகா லட்சுமி தாயாருக்கு செய்வது மிகவும் உத்தமம். இந்த குங்கும அர்ச்சனை செய்வதற்கு இரசாயனம் இல்லாத சுத்தமான குங்குமத்தை வாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு தாழம்பூவை வாங்கி அதை நிழலில் உலர்த்தி காய வைத்து பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும். இதே போல் குங்குமப் பூவையும் வாங்கி பொடி செய்து வைத்து கொள்ள வேண்டும்.

இந்த தாழாம்பு பொடியையும், குங்குமப்பூ பொடியையும் குங்குமத்துடன் சேர்த்து நன்றாக கலந்து கொள்ள வேண்டும். வீட்டு பூஜை அறையில் அன்னையின் விக்ரகம் இருந்தால் அந்த விக்கிரகத்திற்கு நாம் குங்கும அர்ச்சனை செய்யலாம். அப்படி

## குங்கும அர்ச்சனை செய்வதின் நன்மைகள்:



- செல்வ வளம் – குங்குமத்தால் அர்ச்சனை செய்தால் மஹாலட்சுமி அருள் கிடைத்து வீட்டு வளம் அதிகரிக்கும்.
- ஆரோக்கியம் – குங்குமம் உடல் மற்றும் மனதிற்கு சுத்திகரிப்பு சக்தி அளித்து நோய் தடுக்கும்.
- மன அமைதி – அர்ச்சனை செய்யும் போது மனதில் அமைதி, ஒருமை, சாந்தம் ஏற்படும்.
- ஆன்மீக வளர்ச்சி – தியானத்திற்கும், பக்திக்கும் உந்துதல் தருகிறது.
- குடும்ப சாந்தி – குடும்பத்தில் ஒற்றுமை, அன்பு, நல்லிணக்கம் அதிகரிக்கும்.
- வாசலிசை / சக்தி – குங்குமம் சக்தி தெய்வங்களின் பிரதிநிதி; அர்ச்சனை செய்வதால் சக்தி, துணிவு, நம்பிக்கை அதிகரிக்கும்.
- திருமணப் பாக்கியம் – பெண்கள் குங்குமம் பூசுவதால் சௌபாக்கியம், திருமணப் பாக்கியம் நிலைத்து நிற்கும்.
- தீய சக்தி நீக்கம் – குங்குமம் தீய சக்திகளை விரட்டும் சக்தி கொண்டதாகக் கருதப்படுகிறது.
- மங்கலம் – குங்குமம் மங்கலத்தின் அடையாளம்; அதை அர்ச்சனை செய்தால் வீட்டில் நல்ல நிகழ்வுகள், சுப நிகழ்வுகள் நடைபெறும்.
- அருள் – தெய்வ அருள் எளிதில் கிட்டி, வாழ்க்கையில் தடைகள் நீங்கி முன்னேற்றம் உண்டாகும்.

விக்ரகம் இல்லாதவர்கள் அம்பாளின் படத்திற்கு முன்பாக ஒரு வெற்றிலையை வைத்து அந்த வெற்றிலையில் குங்கும அர்ச்சனை செய்யலாம். வழக்கம் போல் வெள்ளிக்கிழமை பூஜை அனைத்தையும் முடித்துவிட்டு செய்ய வேண்டும்.

தெய்வத்தின் பெயரையே மந்திரமாக உச்சரித்து 108 முறை குங்கும அர்ச்சனை செய்ய வேண்டும். உதாரணமாக மாரியம்மனுக்குச் செய்வ தாக இருந்தால் "ஓம் மாரி அம்மனே போற்றி ஓம்" என்று கூற வேண்டும். அம்பிகைக்கு அர்ச்சனை செய்வதாக இருந்தால் "ஓம் அம்பிகையே போற்றி ஓம்" என்று கூற வேண்டும். மகாலட்சுமிக்கு அர்ச்சனை செய்வதாக இருந்தால் "ஓம் மகாலட்சுமியே போற்றி ஓம்" என்று கூற வேண்டும்.

இப்படி 108 முறை அர்ச்சனை செய்த அந்த குங்குமம் அன்றைய நாள் முழுவதும் அம்பாளின் பாதத்திலேயே இருக்கட்டும். மறுநாள் காலையில் இந்த குங்குமத்தை வெள்ளி குங்குமச்சிமிழில் வைத்து தினமும் எடுத்து நெற்றியில் வைத்துக் கொள்ள வேண்டும். வெள்ளி குங்குமச்சிமிழ் இல்லாதவர்கள் சாதாரண குங்குமச்சிமிழில் கூட வைத்து கொள்ளலாம்.

## திருச்சானூரில் குங்குமார்ச்சனை...



ஸ்ரீபத்மாவதித் தாயார் உத்ஸவ மூர்த்திக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.00 மணி வரை ஸ்ரீகிருஷ்ண ஸ்வாமி முக மண்டபத்தில் அர்ச்சகர்களால் அஷ்டோத்திரம் ஓதப்பட்டு தாயாருக்கு குங்குமம் சமர்ப்பிக்கப்படும். இதனை லக்ஷ்மி பூஜை என்பர். தினமும் மதியம் வேளையில் மூலமூர்த்திக்கு குங்குமார்ச்சனை நடைபெறும். சூழ்நிலையைப் பொறுத்து தி.தி.தே. டிக்கெட்டுகள் வழங்குவதை பொறுத்து இந்த சேவையில் பக்தர்களும் கலந்து கொள்ளலாம்.

குங்குமம் என்பது மங்கலச் சின்னம். பெண்கள் தங்கள் கணவர் நலமாக இருக்க விரும்பி தம் நெற்றியில் அணியும் பொருளாகும். மங்கல நாயகியான ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு நவம்பர் மாதத்தில் அதாவது பிரம்மோத் ஸவத்திற்கு முன் லக்ஷ குங்குமார்ச்சனை வருடத்திற்கு ஒரு முறை நடைபெறுவது விசேஷமாகும். இதில் ஆயிர நாமங்கள் கொண்ட சஹஸ்ர நாமார்ச்சனைப் பண்ணுவர்.

# திருமகளின் திருவருள்

முனைவர் சு.சிவகாமசுந்தரி, காஞ்சிபுரம், 97156 17364

ஸ்ரீமகாலக்ஷ்மி ஐச்வர்ய தேவதையும், உலக மாதாவும், இயற்கை வடிவான அம்மையும் ஆவாள்.உலகத்தின் தாயான ஸ்ரீதேவியை வேத காலத்திலிருந்து நமது முன்னோர்கள் வழிபாடு செய்து கருணை கடாக்ஷத்தைப் பெற்று வந்து உள்ளார்கள். அவ்வகையில் திருச்சானூர் ஸ்ரீபத்மாவதித்தாயாரின் பிரம்மோத்ஸவத்தை முன்னிட்டு எனக்கு ஸ்ரீமகாலக்ஷ்மித் தாயாரின் இன்னருள் கிடைத்ததை “ஸப்தகிரி” வாசகர்களிடம் பகிர்ந்து கொள்வதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்

ஒருநாள் எனக்கு மகாலக்ஷ்மி குறித்த புத்தகம் கிடைத்தது. அப்போது நான் எம்.ஏ படித்து முடித்தேன். கல்லூரி படிப்பு முடிந்தவுடன் வீட்டில் இருந்தேன். வேலைக்கு ஏதும் நான் செல்லவில்லை. மேற்படி நான் எம்.ஃபில் மற்றும் பி.எச்டி படித்து கல்லூரிப் பேராசிரியராக ஆக வேண்டும் என்று விருப்பப்பட்டேன். அந்த சமயத்தில் எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. நான் திருச்சிராப்பள்ளி சீதாலட்சுமி இராமசாமி தன்னாட்சி கல்லூரியில் படிக்கும் பொழுதே வியாழக்கிழமை அதிகாலையில் அனுமன் சாலிசா படிப்பது வழக்கம்.

அதுபோல் வெள்ளிக்கிழமை லக்ஷ்மி பூஜை என் சக்திக்கேற்றபடி செய்வேன். இப்படி விடாமல் ஒவ்வொரு வாரமும் செய்து வந்தேன். எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமலே செய்து வந்தேன். எனக்குத் தேவையான பொருள்களை பூஜைக்காக என் அம்மா வாங்கி வந்து கொடுப்பார்கள். அந்தப் பொருள்களை வைத்து நான் பூஜை செய்து சுமங்கலிக்கு வெற்றிலை பாக்கு, பூ, பழம், கண்ணாடி வளையல் கொடுத்து ஆசிர்வாதம் வாங்கிக் கொள்வேன். அன்றைய தினம் நான் பூஜை எல்லாம் முடித்து வரும்போது என் பெயரை அழைத்துக் கொண்டு சுமங்கலி வருவார்கள். வந்து என்னிடம் பிரசாதம் வாங்கிச் செல்வார்கள். ஒன்று கவனிக்க வேண்டும். நான் லக்ஷ்மி பூஜை செய்தேன் என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஆனால், எனக்கு மிக்க மகிழ்ச்சியான தருணம் அது. ஒருநாள், நான் எட்டு வாரம் விரதம் இருந்து லக்ஷ்மி பூஜை செய்து ஒன்பதாவது வாரம் எட்டு சுமங்கலிகளுக்கு அர்க்கிய பாத்தியம் கொடுத்து, தாம்பூலம் தட்சணை ரவிக்கைத் துணி வளையல் குங்குமச்சிமிழ் எல்லாம் கொடுத்து இந்த லக்ஷ்மி பூஜையை ஒரு விழாவாகச் செய்து மகாலக்ஷ்மித் தாயாரை வரவேற்றிட வேண்டும் என்று என் மனதில் தோன்றியது.






தங்கம் எந்த அளவிற்குச் சிறப்பு வாய்ந்ததாகச் சொல்லப்படுகிறதோ அதை விட பல மடங்கு உயர்ந்தது வெள்ளி. நாம் வெள்ளி அணிகலன்கள் அணிவதற்கும், செல்வம் பெருகுவதற்கும் தொடர்புள்ளதாக சாஸ்திரம் சொல்கிறது. வெள்ளி சுக்கிர கிரகத்துடன் தொடர்புடையது. பொதுவாக வெள்ளி அணிகலன்கள் சந்திரனைக் குறிக்கிறது. சந்திரனை மனோ கிரகம் என்று சொல்வோம்.

வெள்ளி மோதிரம், காப்பு போன்றவை அணிவது என்பது இன்றைய இளைஞர்கள் பலரிடமும் இருக்கும் ஒரு பழக்கமாகும். வெள்ளி நகைகள் அணிவது நன்மை பயக்கும் என்பது தெரியாமலேயே அதனை அணியும் பழக்கம் பலருக்கும் இருக்கிறது.

உண்மையில் வெள்ளி அணிவது ஆரோக்கிய ரீதியான பல பலன்களை அளிக்கும். வெள்ளிக்கிழமை அன்று சுக்கிர ஓரையில் வெள்ளி அணிகலன்கள் வாங்கி வந்து, அதனை சந்தனமும், பன்னீரும் கலந்த நீரில் கழுவி, துடைத்து, நம் இஷ்ட தெய்வத்தின் அல்லது மகாலட்சுமியின் திருப்பாதங்களில் வைத்து அர்ச்சனை செய்த பின் அணிந்து கொள்ளவும். இவ்வாறு வெள்ளி நகைகள் அணிவதால் வெள்ளியிலிருந்து வெளிவரும் ஒரு சில மின் அலைகள் உடலில் இருக்கும் நரம்புகள் வழியே சென்று உடல் உள் உறுப்புகளுக்குள் இருக்கும் நோய்களைக் குணப்படுத்துகிறது. வெள்ளி மோதிரம், காப்பு அணிய விரும்பாதவர்கள் கழுத்தில் வெள்ளி செயின் அணிந்து கொள்ளலாம்.

வெள்ளி அணிகலன்கள் அணிவதால் அழகும், ஆளுமையும் அதிகரிக்கும். வெள்ளி சந்திரனின் தாக்கத்தை அதிகரிப்பதுடன் சளி மற்றும் இருமல் போன்றவற்றைச் சரி செய்யவும் உதவுகிறது என்பர். தம்பதிகளுக்குள் ஒற்றுமை ஏற்படவும், தொழில், வியாபாரம், சந்தைப்படுத்துதல் துறையில் உள்ளவர்கள் வாடிக்கையாளர்களை ஈர்க்கவும் வெள்ளி அணிகலன்களை அணியலாம். இதனால் வாழ்வில் செல்வ வளமும், அதிர்ஷ்டமும் பெருகும். இது கோபத்தைக் கட்டுப்படுத்தி சந்தோஷமாக வைத்திருக்க உதவும். கபம் என்று சொல்லப்படும் நீர் பூதத்தினால் ஏற்படும் நோய்களின் தாக்கத்தை இது குறைக்கிறது. இது உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுகிறது. மூட்டு வலி, மனநிலை பாதிப்பு, மனக்குழப்பம் மற்றும் ஆர்த்ரைடிஸ் போன்ற நோயின் தீவிரம் குறைக்க இது உதவுகிறது என நம்பப்படுகிறது.

**தொகுப்பு - திரு. எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**

உடனே நான் என் மனதில் தோன்றியதை என் அம்மாவிடமும், என்னிடம் பிரியமாக இருந்த அத்தை முறையிலான தாட்சாயிணியிடத்தும் கூறினேன். அவர்களும் நீ தாராளமாக இந்த பூஜையைச் செய்யலாம். உனக்கு லக்ஷ்மியின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும் என்று சொன்னவுடன் பூஜை ஆரம்பித்தேன். பூஜை ஆரம்பமானது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பூஜை அறையில் ஹ்ருதயக் கமலம் கோலம் போட்டு அதில் மஞ்சள் குங்குமம் வைத்து வெற்றிலை பாக்கு மஞ்சள் குங்குமம் பூ பழம் வளையல் வைத்து அன்றைய தினம் பூஜை செய்து ஒரு சுமங்கலிக்கு பூஜையில் வைக்கப்பட்ட பிரசாதத்தினைக் கொடுத்து விட்டு அவர்களின் காலில் விழுந்து நமஸ்காரம் செய்து கொள்வேன்.

இப்படி முதல் வாரம் செய்து முடித்தேன். இரண்டாவது வாரம் செய்யும் போது அத்தையான தாட்சாயணி அவர்கள் “சிவா நான் இந்த இடத்தை கட்டலாம் என்று நினைத்து நாளை ஆட்களை வரச்சொல்லி இருக்கிறேன்” என்று கூறினார். உடனே

நான் வெள்ளிக்கிழமை விரத பூஜையைப் பாதியிலே விடமுடியாது. நான் பூஜை செய்யக்கூடிய இடத்தை விட்டு விட்டு மற்ற இடத்தில் செய்ய ஆரம்பியுங்கள் என்று சொன்னேன். அத்தையும் சரி என்று சொன்னார்கள். நானும் வெற்றிகரமாக எட்டாவது வார பூஜையும் செய்து முடித்தேன்.

நான் லக்ஷ்மிதேவியின் வரலாற்றினைக் கூறி முடித்தவுடன் லக்ஷ்மி சுலோகத்தைத் சொல்வது வழக்கம். எனக்கு அருள்புரிவதை எப்படி நான் தெரிந்து கொள்வது என்று ஒவ்வொரு வாரமும் பூஜை செய்யும்போது நினைப்பேன். நீ கனவில் வந்தால்தான் செய்த பலன் உண்மையானது என்று சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கு எப்படியம்மா காட்சி தருவாய் என்று நினைத்துக் கொண்டே சுலோகத்தை உச்சரிப்பேன்.

**சுலோகம்**

மஹேஸ்வரி உன்னை நான் மனமுடன் மொழிகளால், மெய்யுடன் மலர்களால் சுத்தித்துத் துதி செய்து, வணங்கியே பூஜிக்க வரமெனக்கருள் புரிவாய்.

வழிவேறில்லையம்மா வல்வினைகள் விலகவே, அம்பிகையே சுந்தரி ஆனந்த வடிவமே, அம்புலி அணிபவர் முகமலர்ப் பானுவே பாபமா இருளினைப் போக்கிடும் ஜோதியே காத்தருள் சங்கரீ,

கருணையின் பெருக்கமே சங்கரீ சாம்பவீ, சம்புவின் மோகினி பூர்ணமாம் மதிதனைப், பழித்திடும் நின்முகம் கண்டதால் அல்லவோ, காமனை வென்றவர் திரும்பினார் இவ்வழி, தேவர்கள் மகிழவே கந்தனைப் பெற்றதாய் கல்பக விருக்ஷமே, கந்தனைப் போலவே கருணையாலுலகினைக் காத்திடுமுன்னையே,

காத்தருள் என்று நான் கேட்டலும்வேண்டுமோ, கௌரீ நீ சொல்லுவாய் அன்னை நீ அம்பிகே, பிதாவும் நீ பார்வதீ அன்பான பிறப்பும் நீ, ஆனந்த வடிவமே ஆயுளோ டைச்வரியம் உனையன்றி வேறில்லை, என்று நான் உன்னையே எண்ணவும் அருள்புரி, சூரியனைப் போல் விளங்கும் ஸ்ரீசக்கர மத்திதனில்,

இளம்வெயில் நிறத்தினளாய் சுவர்ண நிற ஆடையுடன், ஆனந்த முகத்தினராய் ஆயுதங்கள் அபயமுடன், அம்பிகே! உனை நினைத்தேன் அருள்புரிவாய் எந்தனக்கு,

*சர்வ மங்கள மாங்கல்யே சிவே சர்வார்த்த சாதிகே*
*சரண்யே த் ரயம்பிகே கௌரீ நாராயணீ நமோ (அ )ஸ்துதே*
*ஆயுர்தேஹி தனம்தேஹி வித்யாம் தேஹி மஹேச்வரீ*
*ஸமஸ்தம் அகிலாம் தேஹி தேஹிமே பரமேச்வரீ*
*ஸர்வ மங்கள தாயிந்யை நம:*

*வெள்ளிக்கிழமை விளக்கேற்றி வேண்டுகின்றேன் தாயே, வேண்டுவனத் தருவாயே, வேதமுரைக்கும் நாயகியே! ,சிரத்தையுடன் உனை நினைந்து செவி குளிரப் பாடிடுவேன், நல் நினைவும், நற்புத்தியும் நான் பெறவே அருள்வாயே!*

*நம்பிக்கையோடு உன்னை, நான் பணிந்து நிற்கின்றேன் நம்பிகைக் கொடுப்பாய், எனைக்காக்கும் என் தாயே! என் கனவிலேனும் நீ, தோன்றி உன் மலர் முகத்தைக் காட்டிடுவாய்,*

## குறுக்கெழுத்துப்புதிர் 112க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பெ | ரி | ய | பி | ரா | ட் | டி | யா | ர் | ல | 2 ம | |
| 3 ரு | க் | மி | ணி | ச | த் | ய | பா | மா | வா | ர் | 4 பூ |
| ஞ் | 5 தி | ரு | வெ | ள் | ள | க் | கு | ள | ம் | 6 பு | |
| செ | ரு | 7 அ | 8 ர | 9 வி | ந் | த | வ | ல் | லி | ள் | ர் |
| ல் | வ | | ங் | யூ | ம் | நா | | | ல் | ள | யா |
| வ | ல் | ழி | க | க | க்ஷ | தி | | ல | வ | ம் | தா |
| நா | லி | கு | நா | ல | ரு | 10 ஆ | 11 ஹ | ம | து | பூ | த் |
| ய | க் | ட் | ய | க்ஷ் | வி | | ம் | 12 கோ | கா | த | ல |
| கி | கே | பு | கி | மீ | 13 ப | ஞ் | ச | மி | க் | ங் | ம |
| | ணீ | ரு | | வி | ல் | 14 செ | | | ழை | கு | க |
| | | 15 தி | ரு | க் | 16 க | ண் | ண | ங் | 17 கு | டி | ங் |
| | து | ந் | மு | கொ | க் | ரு | தி | த் | வ | ல் | 18 செ |

***கண்டதும் என் பிணி தீரும் கவலையெங்கோ ஓடிவிடும்.***

ஏழாவது வாரம் இரவு என் கனவில் வீட்டுக் கட்டிலில் இரு பக்கமும் என் அம்மாவைப் போலவே ஒரு நீல நிறப் புடவையுடன் இருவர் அமர்ந்து இருந்தனர். அப்போது நான் இதில் என்னுடைய அம்மா யார் என்று கேட்கும்போது ஒருவர் மற்றொருவருடன் ஐக்கியமாகிவிட்டார்.

இந்தத் தெய்வீக நிகழ்வை என் அம்மாவிடமும், தாட்சாயணியிடமும் சொன்ன போது சாட்ஷாத் ஸ்ரீலக்ஷ்மி தேவியே உன் அம்மா வடிவில் வந்து காட்சியளித்து உனக்கு அருள்பாலித்துவிட்டாள் என்று கூறினார்கள். எட்டாவது வாரம் வீட்டில் பூஜை செய்து எட்டு சுமங்கலிகளுக்கு அன்னப்பிரசாதம் கொடுத்து தாம்பூலம் மற்றும் மங்கலப் பொருட்கள் கொடுத்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டேன். பூஜை செய்த ஒரு வருடத்திலேயே எனக்குத் திருமணப் பேறு கிட்டிற்று. அதற்குப்பிறகு மார்கழி மாதம் திருவாதிரை நன்னாளில் வெள்ளிக்கிழமை லக்ஷ்மியின் வடிவாகப் பெண் குழந்தைப் பிறந்தது .

அவளுக்கு திருமகளின் நாமத்தையே சூட்டியுள்ளேன். குழந்தை பிறந்த ஒரு வருடத்தில் என் கணவர் எனக்கு மேற்படிப்பு படிக்க ஏற்பாடு செய்து கொடுத்தார். அதுபடி நான் ஸ்ரீலக்ஷ்மி தேவியின் அருளாணைப்படி முனைவர் பட்டம் வரை படித்து விட்டேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றும் தவறாது வெள்ளி விரத மகிமையும், வைபவ லக்ஷ்மி பூஜையையும் நான் என் குடும்பத்துடன் சேர்ந்து செய்து வருகின்றேன். நான் இருபது வருடமாக உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறேன். என் வாழ்வில் அருள்புரிந்து கொண்டிருக்கின்ற திருமகளின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

## புஷ்கரணி ஸ்நானம் செய்யும் பக்தர்கள் கவனத்தில் வைத்து கொள்ள வேண்டிய விஷயங்கள்



- திருடர்கள் உள்ளனர் ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும்.
- பக்தர்கள் தம் குழந்தைகளோடு உடைமைகளையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- புஷ்கரிணி ஸ்நானத்தின் போது சோப்பு, சாம்புகளைப் பயன்படுத்துதல் கூடாது.
- புஷ்கரிணியில் துணியைத் துவைத்தல் கூடாது.
- புஷ்கரிணியில் நீச்சல் அடித்தல் கூடாது.
- புஷ்கரிணி மற்றும் சுற்றுப்புறத்தினைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.
- ஈரமான ஆடையுடன் ஆலயத்திற்குள் நுழையாதீர்கள்.
- உலர்ந்த ஆடை அணிந்து மட்டுமே ஆலயத்திற்குள் நுழைதல் வேண்டும்.
- காணிக்கை மற்றும் முடிப்புகளை உண்டியில் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.
- புஷ்கரிணியில் குளித்த பின்னர் ஈரமான ஆடைகளை அங்கேயே விட்டுச் செல்லுதல் கூடாது.

## 108 திவ்வியதேச வைபவம் : 96

# திருவேங்கடம்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

சென்ற இதழின் தொடர்ச்சி...

**பாசுரம்:**

**1. பொய்கையாழ்வார்**

உணர்வாரா ருன்பெருமை? ஊழிதோ றூழி,
உணர்வாரா ருன்னுருவந் தன்னை?- உணர்வாரார்
விண்ணகத்தாய் மண்ணகத்தாய் வேங்கடத்தாய்,
நால்வேதம் பண்ணகத்தாய் நீகிடந்த பால்.

**2. பூதத்தாழ்வார்**

உளதென் றிறுமாவா ருண்டில்லை யென்று,
தளர்தல் அதனருகும் சாரார் - அளவரிய
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடி தோயும்
பாதத்தான் பாதம் பயின்று.

**3. பேயாழ்வார்**

இறையாய். நிலன் ஆகி, எண் திசையும் தானாய்,
மறையாய், மறைப்பொருளாய், வானாய் - பிறை வாய்ந்த
வெள்ளத்து அருவி, விளங்கு ஒலி நீர் வேங்கடத்தான்
உள்ளத்தின் உள்ளே உளன்.

**4. திருமழிசை ஆழ்வார்**

சென்று வணங்குமினோ! சேண் உயர் வேங்கடத்தை
நின்று வினை கெடுக்கும் நீர்மையால் - என்றும்
கடிக்கமல நான் முகனும் கண் மூன்றத்தானும்
அடிக் கமலம் இட்டு ஏத்தும் அங்கு.

**6. நம்மாழ்வார்**

குன்றம் ஏந்திக் குளிர் மழை காத்தவன் அன்று ஞாலம்
அளந்த பிரான், பரன்
சென்று சேர் திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம்
வினை ஓயுமே.

**6. பெரியாழ்வார்**

சென்னி ஓங்கு தண் திருவேங்கடம்
உடையாய்! உலகு
தன்னை வாழ நின்ற நம்பீ!
தாமோதரா! சதிரா!
என்னையும் என் உடைமையையும்,
உன் சக்கரப் பொறி ஒற்றிக்கொண்டு
நின் அருளே புரிந்து இருந்தேன்
இனி, என் திருக்குறிப்பே?

**7. ஆண்டாள்**

ஒளி வண்ணம் வளை சிந்தை
உறக்கத்தோடு இவை எல்லாம்
எளிமையால் இட்டு என்னை ஈடு
அழியப்போயினவால்,
குளிர் அருவி வேங்கடத்து, என்
கோவிந்தன் குணம் பாடி,
அளியத்த மேகங்காள் ஆவிகாத்து
இருப்பேனே.



**8. குலசேகராழ்வார்**

*செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!*
*நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்*
*படியாய்க் கிடந்து உன்பவளவாய் காண்பேனே*

**9. திருப்பாணாழ்வார்**

*அமலன். ஆதிபிரான், அடியார்க்கு என்னை ஆட்படுத்த*
*விமலன், விண்ணவர்கோன், விரையார் பொழில் வேங்கடவன்*
*நிமலன் நின்மலன், நீதிவானவன், நீள்மதிள் அரங்கத்து அம்மான், திருக்*
*கமலபாதம் வந்து என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே*

**10. திருமங்கையாழ்வார்;**

*தாயே தந்தை என்றும், தாரமே கிளைமக்கள் என்றும்*
*நோயேபட்டு ஒழிந்தேன், உன்னைக் காண்பதோர் ஆசையினால்,*
*வேய் ஏய் பூம்பொழில் சூழ், விரை ஆர் திருவேங்கடவா!*
*நாயேன் வந்து அடைந்தேன், நல்கி ஆள் என்னைக் கொண்டு அருளே*

**14. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாசுரம்**

*தானே சரணமுமாய், தானே பலமுமாய்த்*
*தானே குறை முடியும் தன்மையான் - தேன் ஏய்*
*திருவேங்கடம் தொழுதேம்: தீய விபூதிக்குள்*
*மருவேம்: கடந்தனெம் இல்வாழ்கு*

**நாமாக்கள்:**

*906. ஓம் சக்ரீ நம:*

சக்ரம் முதலிய ஆயுதங்களைத் தரித்தவன்.

*ஓம் பூர்ணாநிதி: நம:*

பஞ்சமி, தசமி, பௌர்ணமி, அமாவாஸ்யை போன்ற திதிகளுக்கு ஒருவித சக்தியை அளித்து அவ்விதம் பூஜிக்கப்படுபவள்.

*909. ஓம் விக்ரம் நம:*

சிறந்த செயல்களை உடையவன்.

*ஓம் அம்ருதம்பரா: நம:*

அம்ருதத்தைத் தரித்தவள்.

*910. ஓம் ஊர்ஜிதஸாசன: நம:*

அசையாத கட்டளை உடையவன்.

*ஓம் காஷ்டா நம:*

உயர்வின் எல்லையாக இருப்பவள்.

*911. ஓம் ஸப்தாதிக: நம:*

வேதவாக்குகட்கும் எட்டாதவன்.

*ஓம் காமேச்வரீ: நம:*

விரும்பியதை அளிக்கும் உரிமை ஆற்றல் உள்ளவள்.

திருவேங்கடம் திவ்ய தேசம் தொடர்ந்து தரிசிப்போம்...

## ஸப்தகிரி செப்டம்பர் 2025 விடைகள்

1. தியாகராஜ சுவாமிகள்.
2. ஸப்தகிரி இதழ்.
3. பாவங்களை எரித்தல்.
4. பாத்திரப்பத சுக்லபட்ச சதுர்த்தி.
5. பரக்காமணி.
6. திருமங்கை ஆழ்வார்.
7. பெரிய திருமலை நம்பி.
8. திருமழிசை ஆழ்வார்.
9. ஹம்ஸத்வனி ராகம்.
10. மஹந்துக்கள்.
11. சுவாமி வேதாந்த தேசிகர்.
12. பெரியாழ்வார்.
13. திருவோணம்.
14. ஆளவந்தார்.
15. வராகப் பெருமான்.






## போட்டி எண். 38

**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வன் கௌ. நிமலன், தடாகம் சாலை, கோவை.
2. செல்வன் என். கார்த்திகேயன், நாகல் நகர், திண்டுக்கல்.
3. செல்வன் பிரணவ் கிருஷ்ணா, ராசிபுரம், நாமக்கல்.

திரு. எஸ். ஸ்ரீதுரை, காஞ்சீபுரம். 9486139685

# மகாகவி போற்றிய ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயார்



தேசபக்தியும் தெய்வபக்தியும் நமது பாரத தேசத்தில் பொங்கிப் பாய்ந்த காலம் ஆகிய 19 ஆம் நூற்றாண்டில் பிறந்து முப்பத்தொன்பது வருடங்களே வாழ்ந்து மறைந்த பெரும் கவிஞர் ஸ்ரீசுப்பிரமணிய பாரதியார்.

பாரதியாரின் ஸ்தோத்திரப் பாடல்கள் என்ற வகைமையின் கீழ் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, எம்பெருமாட்டி ஸ்ரீராதை, முருகன், வள்ளி, சரஸ்வதி, ஸ்ரீமஹாலக்ஷ்மி, காளி, சூரியன், சந்திரன் ஆகியோரைப் போற்றி வணங்கிடும் கவிதைகள் பலவும் உள்ளன.

அவற்றுள் திருமகளைச் சரண் புகுதல், நவராத்திரிப் பாட்டு ஆகிய கவிதைகள் வழியே மகாகவி பாரதியார் ஸ்ரீமஹாலக்ஷ்மியைப் போற்றுகின்ற பாங்கினை இங்கே காண்போம்.

அன்றைய ஆங்கிலேய ஆட்சியில் நமது பாரததேசத்தின் பெரும்பாலான மக்கள் வறுமை, பசி, பஞ்சம் ஆகியவற்றினை வஞ்சனையின்றி அனுபவித்து வந்தவர்கள்தாம். எனவேதான் தாமும் தம்மைப் போன்ற பாரதப் புதல்வர்கள் பலரும் அனுபவித்து வந்த வறுமையானது இம்மகாகவியின் நெஞ்சினை உறுத்த, அந்த உறுத்தலானது அவருடைய கவிதைகளில் வெளிப்பட்டது.



தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாம் ஓர் பாரத தேசம்
பஞ்சமோ பஞ்சம் என்றே நித்தம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிகின்றாரே இவர்
துயர்களைத் தீர்க்க ஓர் வழியிலையே

என்றெல்லாம் வறுமையினால் பீடிக்கப்பட்ட நமது தேசத்தையும், அதன் மக்களையும் நினைந்து உருகிய நம் மகாகவி பாரதியார் அவ்வறுமையைத் துடைத்தெறிந்து சுபிட்சத்தை அனுபவிப்பதற்குத் திருமகளாகிய ஸ்ரீமஹாலக்ஷ்மித்தாயாரின் திருவடிகளைச் சரண் அடைவதே உன்னதமான வழி என்று தெளிவு பெற்றார். அதனை அமரத்துவம் வாய்ந்த தம்முடைய கவிதைகளின் மூலம் இவ்வுலகுக்கும் வெளிப்படுத்தினார்.

வாருங்கள், மகாகவி எடுத்துரைக்கும் நம் மஹாலக்ஷ்மித் தாயாரின் மேன்மைகளை அனுபவித்து மகிழ்வோம். வறுமையில் வாடுபவர்களின் மனோநிலை சதாசர்வ காலமும் சிறுமை, அவமானம் ஆகியவற்றால்

வருத்தத்தில் ஆழ்ந்திருக்குமாம். அது மட்டுமா? இப்பிரபஞ்சத்திலேயே மிகவும் உன்னதமானதாகப் போற்றி வணங்கப்படுவதும், கேட்பவர்களை தெய்வீக நிலைக்கு உயர்த்துவதுமாகிய வேதத்தின் மீதும் வெறுப்பு ஏற்பட்டுவிடுமாம். சிந்தனையில் சோர்வு ஏற்படுமாம்.

அத்தனை கொடியதாகிய வறுமை நீங்குவதற்கு நாம் திருமகளையே சரணாகப் பற்ற வேண்டும் என்பது மகாகவியின் கூற்றாகும்

*மாதவன் சக்தியினைச் செய்ய*
*மலர்வளர் மணியினை வாழ்த்திடுவோம்!*
*போதும் இவ் வறுமை எல்லாம் எந்தப்*
*போதிலும் சிறுமையின் புகைதனிலே*
*வேதனைப் படு மனமும் உயர்*
*வேதமும் வெறுப்புறச் சோர் மதியும்*
*வாதனை பொறுக்கவிலை அன்னை*
*மாமகள் அடியிணை சரண் புகுவோம்.*

மகாகவி சரணடைய விரும்புகின்ற தேவியாகிய ஸ்ரீமஹாலக்ஷ்மியின் தோற்றச் சிறப்பும், குணநலன் களும் எப்படிப்பட்டவையாம்?

இதோ அந்த மகாகவியின் வார்த்தைகள் மூலமே அறிந்துகொள்வோம் வாரீர்.

*பாற்கடலிடைப் பிறந்தாள் அது*
*பயந்த நல் அமுதத்தின் பான்மை கொண்டாள்;*
*ஏற்குமோர் தாமரைப்பூ அதில்*
*இணைமலர்த் திருவடி இசைந்திருப்பாள்;*
*நாற்கரம் தானுடையாள் அந்த*
*நான்கிலும் பலவகைத் திருவுடையாள்;*
*வேற்கரு விழியுடையாள் செய்ய*
*மேனியள் பசுமையை விரும்பிடுவாள்.*

மகாகவியின் பாடல்கள் பெரும்பாலும் நம்மிடையே அன்றாடம் புழங்குகின்ற எளிய சொற்களைக் கொண்டு பாடப்பட்டவை என்பதால் விளக்கவுரை ஏதும் இல்லாமலே இவற்றின் பொருளை அனைவரும் உணர்ந்து உள்வாங்கிக்கொள்ள இயலும்.

மேற்கண்ட பாடலில் ஸ்ரீமஹாலக்ஷ்மித்தாயார் தன்னுடைய திருக்கரங்கள் நான்கிலும் பலவிதமான செல்வங்களை உடையவளாக இருக்கின்றாள் என்று மகாகவி பாரதியார் பாடியுள்ளார். இவ்விடத்தில் ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளிய ஸ்ரீஸ்துதியிலுள்ள ஒரு சுலோகத்தை நினைவு கூர்வது சிறப்பு.

*யோகாரம்ப த்வரித மனஸோ யுஷ்மதை காந்த்ய யுக்தம்*
*தர்மம் ப்ராப்தும் ப்ரதமமிஹ யே தாரயந்தே தநாயாம்*
*தேஷாம் பூமேர் தநபதி க்ருஹாத் அம்பராத் அம்பராதம்புதேர்வா*
*தாரா நிர்யாந்தி அதிகமதிகம் வாஞ்ச்சிதாநாம் வஸூநாம்*

ஸ்ரீமஹாவிஷ்ணுவுடன் கூடிய ஸ்ரீமஹாலக்ஷ்மியைச் சரணம் அடைபவர்களுக்கு ஆகாயம், கடல், பூமி, குபேரப் பட்டினம் ஆகிய நான்கு இடங்களிலிருந்தும் போதும் போதும் என்னும் அளவுக்குச் செல்வங்கள் குவியும் என்று கூறும் ஸ்வாமி ஸ்ரீதேசிகன்






**அன்னப்பிரசாத மையம்**

**தானத்தில் எல்லாம் சிறந்தது அன்னதானம். யாரானாலும் சரி போதும் என்று சொல்லும் ஒரே தானம் அன்னதானம். திருமலையில் நித்ய அன்னதானம் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. தி.தி.தே. திருச்சானூரிலும் பக்தர்களுக்காக அன்னப்பிரசாதக் கூடத்தை ஏற்படுத்தி, தாயாரின் அருளால் நேரத்திற்கு உணவு பரிமாறி பக்தர்கள் பலருடைய பசியை ஆற்றி வருகின்றது.**

- அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- அன்னப்பிரசாதம் பெறுமிடத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- திருமலையில் கைக்குழந்தைகளுக்குத் தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையானவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

அருளிய சுலோகத்தின் உட்பொருளை நமக்கெல்லாம் உணர்த்துவதைப் போலவே ஸ்ரீமஹாலக்ஷ்மித்தாயார் தன்னுடைய திருக்கரங்கள் நான்கிலும் பலவிதமான செல்வங்களை வைத்திருக்கின்றாள் என்று மகாகவி பாடியுள்ளது நம்மை வசீகரிக்கின்றது. இது மட்டுமா?

அன்னை ஸ்ரீமஹாலக்ஷ்மி எழுந்தருளியிருக்கும் இடங்கள் எவை எவை என்றும் சுவைபட விவரிக்கின்றார் மகாகவி

*நாரணன் மார்பினிலே அன்பு நலமுற நித்தமும் இணைந்திருப்பாள்;*
*தோரணப் பந்தரிலும் பசுந் தொழுவிலும் சுடர் மணி மாடத்திலும்*
*வீரர் தம் தோளினிலும் உடல் வியர்த்திட உழைப்பவர்தொழில்களிலும்*
*பாரதி சிரத்தினிலும் ஒளி பரவிட வீற்றிருந்தருள் புரிவாள்*

மேற்கண்ட பாடலில், அன்னை ஸ்ரீமஹாலக்ஷ்மி இந்த ஸ்தோத்திரப் பாடலை இயற்றியுள்ள மகாகவி பாரதியாராகிய தமது சிரத்தில் மட்டுமின்றி, அறிவுக்கடவுளாகிய ஸ்ரீசரஸ்வதிதேவியாகிய பாரதியின் சிரத்திலும் வீற்றிருப்பதாக இரண்டு பொருள்படக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாக உள்ளது. மேலும்,

*பொன்னிலும் மணிகளிலும் நறும் பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்,*
*கண்ணியர் நகைப்பினிலும் செழும்காட்டிலும் பொழிலிலும்கழனியிலும்*
*முன்னிய துணிவினிலும் மன்னர் முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்*
*பன்னி நற்புகழ் பாடி அவள்பதமலர் வாழ்த்திநற் பதம் பெறுவோம்.*

மங்கலமும், மகிழ்ச்சியும் விளங்கும் இடங்களில் எல்லாம் மஹா லக்ஷ்மித்தாயார் எழுந்தருளுவதை மகாகவி எடுத்துரைக்கின்றார். இப்பாடலில், *"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே"* என்று பாடியருளிய ஸ்வாமி ஸ்ரீநம்மாழ்வாரை அடி ஒற்றி, மகாகவி பாரதியார் பாடி இருப்பது ஸ்ரீவைஷ்ணவர்களின் நெஞ்சங்களைப் பரவசப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

தொடர்ந்து பாடிடும் நம் மஹாகவி பாரதியார்

*மண்ணினுள் கனிகளிலும், மலை வாய்ப்பிலும், வார்கடல் ஆழத்திலும்,*
*புண்ணிய வேள்வியிலும், உயர்புகழிலும் மதியிலும் புதுமையிலும்,*
*பண்ணுநற் பாவையிலும், நல்ல பாட்டிலும் கூத்திலும் படத்தினிலும்,*
*நண்ணிய தேவிதனை,எங்கள் நாவிலும் மனத்திலும் நாட்டிடுவோம்.*
*வெற்றிகொள் படையினிலும்,பல விநயங்கள் அறிந்தவர்கடையினிலும்,*
*நற்றவ நடையினிலும் நல்ல, நாவலர் தேமொழித் தொடரினிலும்,*
*உற்ற செந்திருத்தாயை நித்தம், உவகையில் போற்றி இங்(கு) உயர்ந்திடுவோம்;*
*கற்றபல் கலைகள் எல்லாம், அவள் கருணைநல் ஒளி பெறக் கலி தவிர்ப்போம்.*

என ஸ்ரீமஹாலட்சுமித் தாயாரின் பெருமையைப் போற்றி, அவளுடைய திருவருளை வேண்டி அடி பணிகின்றார். ஸ்வாமி ஸ்ரீதேசிகனும், "இன் அமுதத் திருமகள் என்று இவரை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே" என்று பாடியுள்ளார்.

மகாகவியோ, அன்னை மஹா லக்ஷ்மியைச் சரண் அடைந்தாலே எம்பெருமானின் திருவருள் தானே நம்மைத் தேடி வரும் என்பதை உணர்ந்தவராய், இன்னொரு பாடலையும் பாடி உள்ளார்.

நவராத்திரிப் பாட்டு என்ற தலைப்பில் மலர்ந்த அந்தப் பாடல் இதுதான்,

*பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி*
*மின்னு நவரத்தினம் போல் மேனி அழகுடையாள்,*
*அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள்,ஸ்ரீதேவி*
*தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.*

திருவேங்கடமுடையானின் திருமார்பில் எப்பொழுதும் நிலையாக வீற்றிருப்பவளும், அப்பெருமானின் செல்வச் செழிப்புக்கும், சகலவிதமான பெருமைகளுக்கும் காரணமாக விளங்குபவளும், செல்வங்களின் தலைவனாகக் கருதப்படும் அந்த குபேரனுக்கே செல்வச் செழிப்பினை வழங்கி அருளிய வளுமாகிய ஸ்ரீபத்மாவதித் தாயார் கார்த்திகை பிரம்மோத்சவம் கண்டருளுகிறாள்.

ஸ்ரீபத்மாவதித் தாயாரின் அருளை பெறும் இந்த அற்புதமான பிரம்மோத்சவத் தருணத்தில் தலை சிறந்த தமிழ்க் கவிஞராகிய மகாகவி பாரதியார் பாடியுள்ள மிக அருமையான திருமகள் துதிப்பாடல்களை நாம் துதித்து பிரம்மாண்ட நாயகியான அத்தாயாரின் பேரருளைப் பெற்றுப் பெருவாழ்வு பெறுவோமாக!

திருச்சானூர் ஸ்ரீ பத்மாவதித் தாயார் ஆலய பிரம்மோற்சவம் ஆண்டுதோறும் தாயார் அவதரித்த கார்த்திகை மாதம் சுக்ல பட்ச பஞ்சமி நாளை தீர்த்தவாரி நாளாகக் கொண்டு ஒன்பது நாட்கள் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டு பிரம்மோற்சவம் *17.11.2025* திங்கட்கிழமை துவஜாரோஹணம் என்ற கொடியேற்றத்துடன் துவங்கி, *25.11.2025* செவ்வாய்க்கிழமை சக்கரஸ்நானம் என்னும் தீர்த்தவாரியுடன் நிறைவு பெறுகிறது. உலகம் முழுதும் உள்ள பக்தர்களும் கண்டு மகிழும் வகையில் இந்த பிரம்மோற்சவ நிகழ்ச்சிகள் அனைத்தையும் எஸ்.வி.பி.சி. சேனல் நேரடி ஒளிபரப்புச் செய்கிறது.

கொடியேற்றத்திற்கு முந்தையநாள் *16.11.2025* ஞாயிறு அன்று தாயாருக்கு லட்ச குங்குமார்ச்சனை வைபவம் விமரிசையாக நடைபெறும். கீழ்க்கண்ட விவரப்படி ஒன்பது நாட்களும் வெவ்வேறு வாகனங்களில் தாயார் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறாள்.

பிரம்மோற்சவத்தின் முதல் நாள் துவஜா ரோஹணம் என்னும் கொடியேற்றத் தின் போது அந்தக் கொடியில் யானை உருவம் வரையப் படுகிறது. திருவேங்கடவனுக்கு கருட வாகனம் போன்று தாயாருக்கு மிகவும் பிடித்த வாகனமாக யானை உள்ளது.

உற்சவத்தின் முதல் நாள் மாலை திருமாலின் சயனமாகத் திகழ்ந்திடும் சேஷனின் வடிவமான சிறிய சேஷ வாகனத்தில் தாயார் எழுந்தருளு கிறாள். இரண்டாவது நாள் காலை பெரிய சேஷ வாகனத்திலும், இரவு தூய்மையின் வடிவமாகத் திகழ்ந்திடும் ஹம்ச வாகனத்திலும் தாயார் எழுந்தருள்வதைத் தரிசிக்கலாம். மூன்றாவது நாள் குளிர்ச்சியை அளித்திடும் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட முத்துப்பந்தல் வாகனத் திலும்,இரவு நல்லோரைக் காத்திட கம்பீரமாக சிம்ம வாகனத்திலும் தாயார் திருவீதிகளில் எழுந்தருள் கிறாள். நான்காம் நாள் காலை வேண்டும் வரங்களை அளித்திடும் தாயார் வேண்டியதை அளித்திடும் கல்ப விருக்ஷ வாகனத்திலும், இரவு சிறந்த பக்தனான அனுமந்த வாகனத்திலும் எழுந்தருளி காட்சி தருகிறாள்.

ஐந்தாம் நாள் காலை மோகினி அலங்காரத்தில் பல்லக்கிலும். இரவு ஐச்வர்யம் அளிக்கவல்ல ஐச்வர்ய லட்சுமி கஜ (யானை)

# பிரம்மாண்ட நாயகியின் பிரம்மோற்சவம்





# பஞ்சமி தீர்த்த உற்சவம்

பிரம்மோற்சவத்தின் கடைசி நாளான ஒன்பதாம் நாள் பஞ்சமி தீர்த்த நாளன்று திருமலை ஆலயத்திலிருந்து தாயாருக்கு மஞ்சள்–குங்குமம் முதலான மங்கலப் பொருட்கள், பட்டு வஸ்திரம், ஆபரணங்கள், மலர் மாலைகள் ஆகியவை திருவேங்கடவனின் சீராக திருமலையிலிருந்து அனுப்பப்படுகிறது. அது மட்டுமின்றி லட்டு, வடை, அப்பம் முதலான பிரசாதங்களை யானைகள் மீது ஊர்வலமாக அதிகாலையிலே திருமலையிலிருந்து புறப்பட்டு வீதிஉலாவாக திருச்சானூருக்கு எடுத்து வரப்படுகின்றன. இந்த ஊர்வலம் ஸ்ரீபாதாள மண்டபமம், ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி மற்றும் ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி ஆலய வளாகம் வாயிலாகக் கொண்டு வரப்படுகிறது. பஞ்சமி தீர்த்த மண்டபத்தில் தாயாருக்கும், சுதர்ஸன மூர்த்திக்கும் சிறப்புத் திருமஞ்சனம் நடைபெற்று, சக்கரத்தாழ்வாரை பத்ம சரோவர தீர்த்தக் குளத்தில் புனித நீராட்டுவர். இந்த தீர்த்தவாரி வைபவம் பஞ்சமி திதி அபிஜித் முகூர்த்தத்தில் நடைபெறும். கார்த்திகை மாதம் சுக்ல பட்ச பஞ்சமி திதியன்று ஸ்ரீபத்மாவதித் தாயார் ஆயிரம் இதழ்கள் உடைய தாமரை மலரில் ஆவிர்பவித்த நாளான இந்த பஞ்சமி அன்று இச்சக்கரஸ்நானம் நடைபெறும். இந்த பஞ்சமி தீர்த்த வைபவத்தின் போது திருமாலின் வாகனமான கருடன் தீர்த்தக் குளத்திற்கு மேலே வட்டமிடும் அரிய காட்சி பல்லாயிரக் கணக்கில் குவிந்திருக்கும் பக்தர்களைப் பரவசப்படுத்தும். இந்த கார்த்திகை பிரம்மோற்சவம் பஞ்சமி தீர்த்த உற்சவம் என்றே அழைக்கப்படுகிறது.

வாகனத்திலும் பெருமாளுக்கு கருட வாகனம் எவ்வளவு முக்கியமானதோ, அதே அளவு தாயாருக்கு முக்கியமான வாகனமான கஜ (யானை) வாகனத்தில் எழுந்தருள் புரிகின்றாள். இதற்கென்றே திருமலை ஆலயத்திலிருந்து பிரத்தியேகமாகக் கொண்டு வரப்பட்ட வேங்கடவனின் லக்ஷ்மி காசு ஹாரம் என்ற மிகப் பெரிய தங்கக் காசுமாலை தாயாருக்கும் யானை வாகனத்திற்கும் சேர்த்து அணிவிக்கப்படுகிறது. பக்தர்கள் தாயாரை கஜலக்ஷ்மியாக வழிபடுகின்றனர்.

ஆறாம் நாள் காலை சர்வ உலகங்களையும் ஆளுகின்ற சக்கரவர்த்தியைப் போன்று சர்வபூபால வாகனத்தில் அமர்ந்து பக்தர்களுக்கு சர்வ நலன்களையும் அளிக்க தரிசனமளிக்கின்றாள். இந்த வாகனத்தில் தாயாரை தரிசித்தால் வாழ்வில் வளம் பல பெருகும் என்ற நம்பிக்கை பக்தர்களிடையே உண்டு.

மாலையில் மங்கையர் மட்டும் வடம் பிடித்து இழுக்க, கதிரவனின் பொன்னிறமான கதிர்கள் பட்டு மேன்மேலும் ஒளிர்ந்திடும் தங்கத் திருத்தேரில் மங்கலங்களை அளித்திட மலர்மகள் எழுந்தருளுகிறாள். இரவு திருவேங்கடவனின் வாகனமான கருட வாகனத்தில் தாயார் எழுந்தருளுகிறாள். ஏழாம் நாளில் காலையில் ஒளிவீசும் சூரியப் பிரபை வாகனத்தில் ஒளிர்ந்தும், மாலை குளிர்ச்சி தந்திடும் சந்திரப் பிரபை வாகனத்தில் எழுந்தருளி தன்னை தரிசிக்க காத்திருக்கும் பக்தர்களின் மனதில் குளிர்ச்சியைத் தருகிறாள். எட்டாம் நாள் காலை பக்தர்கள் வடம்பிடித்து இழுக்க சர்வ

அலங்காரத்துடன் நடமாடும் கோயிலாக வணங்கப்படும் திருத்தேரில் எழுந்தருள் புரிகின்றாள். இரவு வேகத்தைக் குறித்திடும் அஸ்வ (குதிரை) வாகனத்தில் எழுந்தருளி வேகமாக பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றுகிறாள்.

கார்த்திகை பிரம்மோற்சவம் என்றும், பஞ்சமி தீர்த்தம் என்றும் அனைவராலும் போற்றப்படும் ஸ்ரீ பத்மாவதித் தாயார் பிரம்மோற்சவத்தின் இறுதி நாளான ஒன்பதாம் நாள் பஞ்சமி தீர்த்தம் மிகச் சிறப்பாக நடைபெறும். இவ்வாறாக நடைபெறும் பிரம்மோத்ஸவத்திற்கு உலகம் முழுவதிலிருந்து இலட்சக்கணக்கில் பக்தர்கள் திருப்பதிக்கு வருகை தருகின்றனர். குறிப்பாக பத்ம புஷ்கரணியில் பஞ்சமி தீர்த்தத்தில் புனித நீராட ஏராளமான பக்தர்கள் குவிகின்றனர். பஞ்சமி தீர்த்த நன்னாளில் பக்தர்கள் ஸ்ரீ பத்மாவதித் தாயார் குறித்த கீழ்க்கண்ட சுலோகத்தை மனதாரத் துதிக்கலாம்.

*விஷ்ணு பத்னீ ஜகந் மாதா*
*விஷ்ணு வக்ஷஸ்தல ஸ்திதே*
*பத்மாஸனே பத்ம ஹஸ்தே*
*பத்மாவதி நமோஸ்துதே*

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பத்னியாகவும், ஜகந் மாதாவாகவும் விளங்குபவளும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் திருமார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற பெயரில் எழுந்தருளியிருப்பவளும், திருக்கரங்களில் தாமரை மலர்கள் ஏந்தி, தாமரை மலரில் அமர்ந்து அருள்பாலிப்பவளுமான ஸ்ரீ பத்மாவதி தேவியை நமஸ்கரிக்கிறேன்.

**திருமதி விஜயலட்சுமி சுப்பிரமணியம், சென்னை.**

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருமலை

## திருமலையில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை

### செய்யக்கூடியன

- ✓ திருமலைக்கு வரும் முன்னர் உங்களுடைய இஷ்ட அல்லது குல தெய்வத்தை வழிபடுங்கள்.
- ✓ ஏழுமலையானைத் தரிசிப்பதற்குமுன் ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடி விட்டு அங்குள்ள வராக ஸ்வாமியைத் தரிசனம் செய்யுங்கள்.
- ✓ கோயிலுக்குள் அமைதியைக் காத்து உங்களுக்குள்ளேயே 'கோவிந்தா' என்று மனனம் செய்யுங்கள்.
- ✓ கோயிலுக்குள் உள்ளபொழுது ஏழுமலையானைத் தியானியுங்கள்.
- ✓ திருமலையில் பாபவிநாசனம், ஆகாச கங்கை, அஞ்சனாத்ரியில் அனுமனையும் தரிசியுங்கள்.
- ✓ திருமலையில் இருக்கும்வரை பழைய சம்பிரதாயங்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் மதிப்பளியுங்கள். உடன் வரும் யாத்திரிகர்களிடையே சமய உணர்வுகளை மேம்படுத்துங்கள்.
- ✓ உங்கள் காணிக்கைகளை உண்டியில் மட்டுமே செலுத்துங்கள்.
- ✓ திருமலையைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுங்கள். எளிதில் கருகக்கூடிய பொருட்களை மட்டுமே பயன்படுத்துங்கள்.

### செய்யக்கூடாதன

- ✘ நான்கு மாடவீதிகளிலும் காலணிகளை அணிந்து செல்லாதீர்கள்.
- ✘ உங்களுடன் அதிகமான நகைகளையோ, பணத்தையோ எடுத்து வரவேண்டாம்.
- ✘ ஏழுமலையானைத் தரிசிப்பதற்குத் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் திருமலைக்கு வராதீர்கள்.
- ✘ தரிசனத்திற்காக அவசரப்படாதீர்கள். வாய்ப்பு வரும்வரை வரிசையில் நின்று செல்லுங்கள்.
- ✘ சம்பிரதாயங்கள் அனுமதிக்காத பட்சத்தில் கோயிலுக்குள் வராதீர்கள்.
- ✘ திருமலையில் எல்லா மலர்களும் இறைவனுக்கே உரியன. ஆகையால் மலர்களைச் சூடாதீர்கள்.
- ✘ தண்ணீரையும், மின்சாரத்தையும் வீணாக்காதீர்கள்.
- ✘ தங்கும் அறையில் புதியோரை அனுமதிக்காதீர்கள். புதியோரிடம் அறை சாவிகளை ஒப்படைக்காதீர்கள்.
- ✘ திருமலைக்கு பிளாஸ்டிக் பாட்டில் மற்றும் பிளாஸ்டிக் பைகளை எடுத்து வராதீர்கள்.

# விஜய தாசர் போற்றிய



# லக்குமி தேவி

திருமதி ஹேமா, திருப்பதி, 77020 15076

விஜய தாசர் 18 ஆம் நூற்றாண்டின் கன்னட ஹரிதாசர்களில் புகழ் பெற்றவர். கோபால தாசர், கிரியம்மா, ஜெகந்நாத தாசர் மற்றும் பிரசன்ன வெங்கட தாசர் போன்ற ஹரிதாசர்களுடன் சேர்ந்து, கன்னட மொழியில் எழுதப்பட்ட "தேவர நாம" பக்திப் பாடல்கள் மூலம் மத்வாசாரியாரின் தத்துவத்தின் நற்பண்புகளைப் பரப்பினர். கன்னட வைணவ பக்தி இலக்கியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக தாசர்களின் தொகுப்பு பாடல்களை கீர்த்தனைகள், சுலாதிகள், உகாபோகங்கள் மற்றும் வெறுமனே பாதங்கள் என வகைப்படுத்தலாம்.

விஜயதாசர் அருளிய பல பாடல்களில் திருமால், தாயார் என்று வேறுபாடு இல்லாமல் ஒரு சில பாடல்களும், தாயாருக்கென்றே தனித்த பாடல்களையும் நமக்கு அருளியுள்ளார். அத்தகைய கீர்த்தனைகளில், *"ஜகத்பதிய தோரம்மா எனகே கருணை மாடம்மா..."* என்று துவங்கும் கீர்த்தனையில் இவ்வாறு வருணிக்கின்றார்.

"ஈரேழு உலகை ஆளுகின்ற "ஸ்ரீ"பதி (ஸ்ரீ என்றால் லக்ஷ்மி, லக்ஷ்மியின் பதி) என்ற திருநாமத்தை உடைய நாராயணனே என் மேல் கருணைக் காட்டுவீராக. இன்னல்கள் பல பனிபோல போக்குபவனே, எந்நேரத்திலும் பக்தர்களைக் காப்பவனே, பகல் இரவு என்று பாராமல் ஆனந்தமாக நாராயணனின் மென்மையான திருவடிகளைப் பிடித்து கொடுப்பவளே மஹாலக்ஷ்மியே பிரம்மாவினால் பூஜிக்கப் பட்டவளே, குயில் போன்ற கானம் பாடும் அதி பிரியவே, ஜெகத்துக் கெல்லாம் முதன்மையான தசாவ தாரணியே என்றும், தாசர் உலகம் கொண்டாடுபவளே ஸ்ரீமஹா லக்ஷ்மியே, பிரம்ம முதலான மூவுலகிற்கும் முதல்வனே விஜய விட்டல ஸ்ரீநிவாசனே திருவேங்கடவனே இந்த உலகைக் காப்பாயாக என்கிறார்.

தசாவதாரங்களில் இராம அவதாரத்திற்கு ஒரு தனி இடம் உண்டு. இராமருக்குத் துணையாக சீதா தேவி வடிவில் தாய் லக்ஷ்மி வந்தாள். விஜய தாசர் *"சீதையா பூமி ஜாதேயா ஜகன் மாதேயா ஸ்மர்ச் விக்கியாதேயா..."* என்ற அழகான கீர்த்தனையில் தாயாரைப் போற்றுகிறார்.

தாயே சீதா தேவியே, பூமா தேவியின் திருமகளே, பாற்கடலில் உதித்த மஹாராணியே, தன்னை சரணடைந்தவர்களின் பயத்தைப் போக்குபவளே, முக்தியைத் தருப வளே, உலகிற்கு எல்லாம் கருணைக் காட்டுபவளே, நிரந்தர மான குணத்தை உடையவளே, தோஷம் அற்றவளே, திருக்கல் யாண குணங்களைக் கொண்ட கல்யாணியே, விஜய விட்டலண னின் பட்டத்து ராணியே, பங்கஜ (தாமரை) மாலையைத் தன் திருக்கரங்களில் ஏந்தியவளே விஜய லக்ஷ்மியே! என திருமகள் திரேதா யுகத்தில் ஸ்ரீராமரின் தர்மபத்னியாக அவதரித்ததைப் பாடுகிறார்.

துவாபர யுகத்தின் நாயக னான ஸ்ரீகிருஷ்ணருக்கு, பட்ட

மஹிக்ஷியாக அவதரித்த ஸ்ரீருக்மிணி தேவியை எண்ணி, விஜயதாசர் ''கமலே நன்னயபாதா கமலா தல் எனகே விமல மதியனித்ரு கமலன்ன மாடிசு...' எனப்பாடுகிறார்.

ஸ்ரீகிருஷ்ணனின் அர்த்தாங்கியான ருக்மிணி என்னும் திருமகளே உன்னுடைய திருவடிகளைப் பற்றினேன். எனக்கு நல்ல புத்தியை அளித்து என்னைக் காப்பாயாக. பிரம்மா இந்திரன் போன்ற தேவர்களால் போற்றப்பட்ட உன்னுடைய திருவடி களை நான் பற்றுகிறேன். இடவலமாக இரு புறங்க ளிலும் யானைகளால் சூழப்பட்டவளே, அனைத்து உலகிற்கும் விசேஷமாக அஷ்ட சௌபாக்கியங் களையும் வழங்குபவளே, என்னுடைய இடர்களை எல்லாம் களைந்து சத்துவ ராஜம் தாமச குணங்களை உன்னதமாக எனக்கு அளித்து, தாயே உன்னுடைய கருணையை எனக்கு வழங்குவாயாக. கஜம் என் னும் யானையை வாகனமாகக் கொண்டு இப்பூ உலகையெல்லாம் காப்பவளே, விட்டலனின் மஹா ராணியே உன்னுடைய திருவடிகளில் நான் பணிந்து துதிப்பேன் என்று விஜய தாசர் போற்றுகின்றார்.

தாசர் உலகம் போற்றிக் கொண்டாடிய மஹா லக்ஷ்மியுடன் நாராயணனை, அவர்கள் அருளிய கீர்த்தனைகளைப் பாடி தாயாரின் அருளைப் பெறுவோமாக!

# (அலர் மேல்) மங்கைக்கு மலர் மஹோத்ஸவம்



*மலர்களை வீட்டில் வளர்ப்பதால் செல்வம், மன நிம்மதி, வெற்றி போன்றவை நம்மைத் தேடி வரும்.*

*ஸ்ரீகிருஷ்ணரால் தரணியைத்தரிசித்த மலர் பாரிஜாதம் என்கிற பவளமல்லி திருமாலுக்கே உரித்தான மிக வாசனையானது. இது திருமாலையே நமக்கு வசப்படுத்தியளிக்கும் ஆற்றல் உடையது.*

*தேவர்கள் இறைவனை மனோரஞ்சித மலர்களால் பூஜிப்பார்களாம். இம்மலரைத் தொழில் செய்யும் இடத்தில் வைக்கும் போது, தொழிலில் நல்ல லாபமும், முன்னேற்றமும் ஏற்படும். பிரம்ம தேவன் அமர்ந்து தவம் செய்வதாக நம்பப்படும் பிரம்ம கமல மலரால் வழிப்பட்டால் அனைத்து வரங்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. எதிர்மறை ஆற்றல், தீய சக்திகளிடமிருந்தும் பாதுகாக்கும். இம்மலர் பத்ரிநாத் சன்னதியில் விஷ்ணுவுக்கும், கேதர்நாத் சன்னதியில் சிவனுக்கும் அர்ப்பணிக்கப்படுகிறது. இம்மலருக்கு மனதைத் தூய்மையாக வைத்து கொள்ளும் சக்தி உண்டு என்பர்.*

*நாகலிங்க மலரில் சிவபெருமான் வாசம் செய்வது போல கிருஷ்ண கமலத்தில் கிருஷ்ணர் வாசம் செய்கிறார். இந்த மலரில் அதிகப்படியான நேர்மறையாற்றல் உள்ளது என்று கூறுகிறார்கள். இந்த மலருக்கு பாண்டவ கௌரவர் பூ என்ற பெயரும் உண்டு. இந்தப் பூவை வீட்டில் வைப்பதால் ஐச்வர்யம் பெருகும் என்று கூறுவர்.*

*செண்பக மலர் பார்ப்பதற்கு அழகாக மஞ்சள் மற்றும் ஆரஞ்ச் நிறத்தில் மலரும். இது சிவனுக்கு மிகவும் உகந்த மலர். செண்பகப்பூ எங்கு வளருகிறதோ அங்கு செல்வச் செழிப்பு இருக்கும். நீர்வளம், நிலவளம் உள்ள இடங்களிலே இந்த மலர் வளருமாம். செண்பகப்பூ சுக்கிரனுக்கு மிகவும் உகந்த பூவாகும். வெள்ளிக்கிழமைகளில் வருகின்ற சுக்கிர ஹோரையில், செண்பகப்பூவை சுக்கிரனை நினைத்து மஹாலட்சுமிக்கு சமர்ப்பித்து பூஜித்தால் செல்வ செழிப்பு பெருகும் என்று கூறப்படுகிறது. இத்தகைய மகிமைகள் நிறைந்த பல மலர்களால் நடத்தப்படும் யாக நிகழ்ச்சியே புஷ்பயாகம். புஷ்ப யாகத்தில் பலவிதமான மலர்கள் டன்டன்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.*

*திருச்சானூரில் பிரம்மோற்சவம் முடிந்த மறுநாள் புஷ்ப யாகம் செய்யப்படுகிறது. அதில் புஷ்பங்களாலேயே யாகமாக எல்லாவித மலர்களாலும் கூடை கூடையாக ஐந்து டன்களுக்கும் மேலே ஸ்ரீபத்மாவதித் தாயாருக்கு திருவடியிலிருந்து திருமுடி வரையிலும் சேர்ப்பர்.*

**தொகுப்பு - திரு. எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**



# நவம்பர் 2025
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

### மேஷம்

தொழில் நிமித்தமாக அடிக்கடி பயணம் செய்ய வேண்டி இருக்கும். தொழில் வளர்ச்சிக்காக செலவு அதிகமாகும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் அல்லது பதவி மாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்திற்குத் தகுந்த மருத்துவம் கிடைத்து உடல் நலமாகும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது.

### ரிஷபம்

தொழிலில் அலைச்சலுக்கேற்ற லாபமும் உண்டு. தொழில் துறையில் புதிய முயற்சிகள் செய்யலாம். கணவன் மனைவிக்குள் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுப் பிறகுச் சரியாகும். சகோதரர்களுக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழிலில் போட்டிகள் அதிகமாகும். எல்லாத் துறைகளிலும் வெற்றி பெறும் மாதம் இது.

### மிதுனம்

தொழிலில் வேலைப் பளுவும், போட்டியும் அதிகமாகும். ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. நண்பர்கள், உறவினர்களால் பிரச்சனை உண்டாகும். மனைவியால் அனுகூலம் உண்டு. சகோதரர்களுக்குள் பிரச்சனை உண்டாகும். குழந்தைகளுக்கு நன்மை உண்டு. தந்தையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. கடுமையாக உழைத்து முன்னேறும் மாதம் இது.

### கடகம்

குடும்பத்தில் மற்றவர்களுடன் பேசும் போது விவாதங்களைத் தவிர்க்கவும். தந்தையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நண்பர்கள் உறவினர்களின் உதவியைப் பெறுவீர்கள். தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. இல்லற வாழ்க்கையில் இருந்த பிரச்சனைகள் தீரும். இரவு நேர பிரயாணத்தில் மட்டும் எச்சரிக்கை தேவை. சந்தோஷத்தை வெளியிடும் நல்ல மாதமிது.

### சிம்மம்

உங்கள் ஆரோக்கியத்திலும், மனைவி ஆரோக்கியத்திலும் மிகுந்த எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவு அதிகமாகும். குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும், கல்விக்காகவும் அதிக செலவுகள் வரும். நண்பர்கள் உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகுச் சரியாகும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு.தர்ம காரியங்களைச் செய்வீர்கள். மிகுந்த சிரமத்துடன் முன்னேறும் மாதமிது.

### கன்னி

தொழில்துறையில் அலைச்சல் மிகவும் அதிகமாகும். உங்கள் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. திருஷ்டியால் உங்கள் முயற்சிகள் தடையாகும். குடும்பத்தில் சச்சரவுகள் அதிகமாகும். மற்றவர்களுடன் பேசும்போது விவாதத்தைத் தவிர்ப்பது நலம். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் கிடைக்கும். கஷ்டப்பட்டு தொழில் செய்து முன்னேறும் மாதம் இது

### துலாம்

தொழிலில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். திடீர் யோகம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல பேரும் புகழும் பதவி உயர்வும் கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்திலிருந்த குறைபாடுகள் நீங்கும். பெண்களுக்கு ஏற்றம் தரும் மாதம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். பழைய பாக்கிகள் வசூலாகும். நல்ல யோகமான மாதம் இது

### விருச்சிகம்

பண மற்றும் குடும்ப விஷயத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். குழந்தைகளால் இருந்த பிரச்சனைகள் தீரும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணப் பாக்கியம் உண்டாகும். மனைவி ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மனக்குழப்பங்கள் தீரும். போட்டியில் வெற்றி கிடைக்கும். எதிர்பாராத நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும் மாதமிது

### தனுசு

திடீர் பயணங்கள் உண்டு. தொழிலில் அலைச்சலும் செலவும் உண்டு. குழந்தைகள் கல்வி மற்றும் வளர்ச்சிக்கு செலவுகள் அதிகமாகும். அஜீரணம் காரணமாக உபாதைகள் உண்டாகும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் சரியாகும். தாயின் ஆரோக்கியத்திற்கு தகுந்த மருத்துவங்கள் கிடைக்கும். செலவிற்கேற்ற வருமானம் உண்டு. நன்மையும் தீமையும் கலந்த மாதம் இது.

### மகரம்

தொழிலில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்கு திருமணம் திடீரென்று முடிவாகும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூல் ஆகும். பல பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும் மாதம் இது


### கும்பம்

தொழிலில் போட்டிகள் அதிகமாகும். குடும்ப தேவைக்காக கடன் வாங்க வேண்டி வரும். குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். முடிவான திருமணத்தில் சிலர் குழப்பங்களை விளைவிப்பார்கள். தாய் தந்தையருடன் சுமூக உறவுகள் இருக்கும். தொழில் துறையில் வரும் லாபம் கடன் அடைப்பதற்குச் சரியாகி விடும். மிகுந்த அலைச்சலுடன் முன்னேறும் மாதம் இது

### மீனம்

தொழிலில் வேலைப் பளு அதிகமாகும். வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்கு திடீரென்று திருமணம் முடிவாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழிலில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். வேலை கிடைக்காதவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். திருத்தலங்களுக்கு யாத்திரை செய்வீர்கள். நல்ல யோகமான மாதம் இது.


# உழைப்பு என்பதே லக்ஷ்மிகரம்



அழகனுக்குப் பெருமை தாங்க முடியவில்லை. நேற்று வரை அவன் பெருமாள் கோயில் வாசலில் பிச்சைக்காரனாக இருந்தான். இரவில் வீடு திரும்பும் போது இருளில் ஏதோ காலில் இடறியது. ஒரு பெரிய பொட்டலம் கிடந்தது. எடுத்து பிரித்துப் பார்த்தான். உள்ளே ஏராளமான பொற்காசுகள் பளபளத்தன.

வீட்டுக்கு எடுத்துச் சென்றான். யாரிடமும் அதை காட்ட வில்லை. குடும்பத்தார் வழக்கம்போல் அவனைத் திட்டி தீர்த் தார்கள். “உன்னால் நாங்கள் வறுமையைத்தான் சந்தித்தோம்” என்றார்கள். “கவலைப்படாதீர்கள் நாளை நீங்கள் சொர்க்கத்தை பார்ப்பீர்கள்” என்றவன் பொட்டலத்தைத் தலைமாட்டில் வைத்துவிட்டு உறங்கி விட்டான். இத்தனை நாள் கிடைக்காத சொர்க்கம் இனி கிடைக்கப் போகிறதா என எண்ணிய குடும்பத்தாரும் தூங்கிவிட்டனர்.

அன்று அழகனின் கனவில் தோன்றிய மகாலக்ஷ்மி “நீ என் பதியின் வாசலில் அமர்ந்திருந்த புண்ணியத்திற்காக இந்த பலன் கிடைத்துள்ளது. இருந்தாலும் இதை நீண்ட கால சேமிப்பாக வைத்துக் கொள். பிச்சை எடுப்பதை விட்டு உழைத்து உன் குடும்பத்தைக் காப்பாற்று” என்றாள். அழகனுக்கு உழைப்பில் விருப்பமில்லை. இருக்கிற பணத்தைச் சுகமாகச் செலவழிக்கலாம் என எண்ணி படுத்து விட்டான்.



மறுநாள் அவன் மனைவி முன்னதாக எழுந்து வீடு பெருக்கினாள். ஏதோ ஒரு பொட்டலம் கண்ணில் பட பிரித்துப் பார்த்தாள். உள்ளே சொக்கட்டான் காய் இருந்தது. “இந்த மனுஷனுக்குச் சூதாட்ட பழக்கம் வேறு இருக்கிறதா” என எண்ணியவள் அதை வீசி எறிந்து விட்டாள். அவ்வழியே சென்ற ஒரு புண்ணியவான் கையில் அது சிக்க, அவன் பிரித்துப் பார்த்தான். உள்ளே தங்கக் காசு இருந்தது. பையில் வைத்துக் கொண்டு போய் விட்டான். விழித்துப் பார்த்த அழகன் பொட்டலம் காணாதது கண்டு திடுக்கிட்டான். நடந்ததை அறிந்து வருத்தப்பட்டான்.

லக்ஷ்மி சொன்னதை செயல்படுத்த நினைக்காததால் தனக்கு நேர்ந்த அவலத்தை எண்ணி சோகமடைந்தான். “உழைப்பு முக்கியம் என்ற லக்ஷ்மியின் அறிவுரையைக் கேட்காமல் போனேனே! இனி என் வாழ்நாளில் இப்படி ஒரு சந்தர்ப்பம் எப்படி கிடைக்கும்?” என புலம்பிய படியே திருவோட்டை எடுத்து கொண்டு மீண்டும் பிச்சைக்கு கிளம்பி விட்டான்.

லக்ஷ்மி நம் வீட்டில் தங்கிட வேண்டுமானால் உழைப்பு முக்கியம் என்பதே இந்த கதையின் நீதி.

**திரு. எம் அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி, 97503 33265.**

சிறுவர் உலகம்

# பல்சுவைப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



இங்குள்ள எண்களை வரிசையாக இணைத்தால் இறைவனுக்கு சூட்டி மகிழ்வதற்கு அழகான மலரை நீங்கள் காணலாம்.


மஹாலக்ஷ்மித் தாயாருக்கு வண்ணம் தீட்டி தாயாரின் அருளைப் பெறலாம் வாருங்கள்!



கையில் தீபங்களை ஏந்திக் கொண்டு வருபவர்களுக்கு இறைவனை அடைய பாதையைக் கண்டு பிடித்து உதவுங்கள்.

பாதையைக் கண்டு பிடிக்கலாம் வாருங்கள்!






பூங்கொத்துக்கள் பல உள்ளன. பார்ப்பதற்கு ஒரே மாதிரி இருந்தாலும் அவற்றில் சில பூங்கொத்துகள் மாறி உள்ளன. அவற்றைக் கண்டுபிடிப்போம். வாருங்கள்.

விடை :
பூங்கொத்துகள் 5,8,11 மாறி உள்ளன.

வினாடி வினா

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-40

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. கைசிகப்பண்ணினைப் பாடியவர் ..........
2. தேசத்தில் வறுமை நீங்கிட மகாலட்சுமியைச் சரண்புகுந்த தேசியக்கவி ..........
3. நாராயணனின் திருப்பாதம் பற்றினால் கிடைப்பது ..........
4. ஸ்வாமியும் தாயாரும் நிலத்திலேயே வீற்றிருந்து அருள் புரியும் திவ்யதேசம் ..........
5. நடமாடும் கோயிலாக பக்தர்களால் வணங்கப்படுவது ..........
6. குணரத்ன கோசம் அருளிய ஆசாரியர் ..........
7. சுவாமி தேசிகரால் ஸ்ரீஸ்துதி அருளப்பட்ட திவ்ய தேசத் தாயார் ..........
8. நம்பாடுவானின் கைசிக துவாதசி விரதம் பற்றிக் கூறும் புராணம் ..........
9. நிறைக்குட விளக்காக நம்மாழ்வார் யாரைக் குறிப்பிடுகின்றார் ..........
10. லட்சுமி நாத (லட்சுமிநாதன்) சமாரம்பாம் என்று கூறும் நூல் ..........
11. சதுஸ்லோகீ ஸ்தோத்திரம் அருளிச்செய்த ஆசாரியர் ..........
12. யாரைப் பற்றினால் எம்பெருமானின் அருள் உடனே கிடைக்கும் ..........
13. ஐச்வர்யம், கைவல்யம் யார் அருளால் கிடைப்பதாக ஆளவந்தார் கூறுகிறார் ..........
14. திருவேங்கடக் கலம்பகம் எனும் நூலை இயற்றியவர் ..........
15. இராமபிரானிடமிருந்து காகாசுரனை காத்தவர் ..........

## போட்டிக்கான நிபந்தனைகள்




- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்தியக் குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்தப் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, 2nd Floor, T.T.D. Press Building, K.T. Road, Tirupati -517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்விதத் தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.11.2025.


| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

சக்கரத்தைச் சுற்றுங்கள்!

அதே வண்ணக் கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!



குழந்தைகளே! திருச்சானூரில் பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. அந்த பிரம்மோத்ஸவ நிகழ்விலிருந்து...

**விடைகள்**

1) ஸ்ரீபத்மாவதித் தாயார், 2) உத்திராடம், 3) கார்த்திகை, 4)யானைவாகனம்,
6) ஸ்ரீபத்மாவதித் தாயார், 5) பத்மசரோவரம், 7) யானை என்கிற கஜம், 8) பஞ்சமி திதி,

## கணித விளையாட்டு

இங்கு புத்தகத்தில் உள்ள கணித வினாவிற்குப் பொருத்தமான எழுதுகோல்களின் எண்ணிக்கை உள்ள விடையைப் பொருத்துக




1) i, 2) iii, 3) v, 4) ii, 5) vi

**விடைகள்**



*குழந்தைகளே! நலமாக இருக்கிறீர்களா? நான் சேற்றில் முளைப்பேன். காண்போர் கண்களுக்கு விருந்தளிப்பேன். பலவித நிறங்களில் இருக்கும் என் மீது பல தெய்வங்கள் எழுந்தருளுவர். சிவப்பு நிறத்தில் தனத்தை அளிக்கும் ஸ்ரீமஹாலக்ஷ்மியும், வெள்ளை நிற மலரில் கல்விச் செல்வத்தை அருளும் கலைவாணியும் அமர்ந்திருப்பதைக் காணலாம். சித்தர்கள் பயன்படுத்தும் மருத்துவத்திலும் நான் முதன்மையான இடம் வகிப்பேன்.*


*மழலைச் செல்வங்களே! மேலே குறிப்பிட்டது மற்றும் மேலே உள்ள சித்திரத்தின் அடிப்படையில் நான் யார் என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...*

விடை : தாமரை மலர்

சித்திரக் கதை

# பொன் மழையைப் பொழிவித்த பொற்றாமரையாள்

கதை மூலம் : திரு.ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் :திரு.து.நாத்




சுவாமி தேசிகரின் திருவாக்கில் இருந்து ஸ்ரீ ஸ்துதி ஸ்தோத்திரங்கள் வெள்ளமாக வந்து கொண்டிருந்தன. தாயாரின் திருக்கண்களும் ஒளிர்ந்தன.
யோகாரம்ப த்வரிதமனஸோ... தாயே இந்த பிரம்மச்சாரிக்கு அருள் புரியுங்கள்.
தாயே! பாஹிமாம் தேவி.
ஸ்ரீ ஸ்துதி 25 ஸ்தோத்திரங்களால் நிறைவுற்றது. பெருந்தேவித் தாயாரின் திருவருளால் சாரை சாரையாக தங்க மழை பொழிந்தது.
சுவாமி! தங்களது அநுகிரகத்தால் தாயாரின் கருணை எனக்கு கிட்டியது.
இவையாவும் தாயாரின் தயையே.
சுவாமி! தங்களின் திருவடிகளை வணங்குகிறேன். தங்க நாணயங்கள்... பொன்னொளியில் பொற்காசுகள்.
குழந்தாய்! பேராசைக் கொள்ளாதே. உன் வறுமை நீங்கும் அளவிற்கு தங்கத்தை எடுத்துக் கொள்... அதுதான் உனக்கான பிராப்தம்.
அப்படியே சுவாமி !
பிரம்மச்சாரி தனக்குத் தேவையான தங்கக் காசுகளை எடுத்து கொண்டான். மீதம் அங்கே இருந்த காசுகள் யாவும் மாயமாய் மறைந்தன.
குழந்தாய்! இனி க்ருஹஸ்தாஸ்ரமத்தை ஏற்றுக் கொள்.
பிரம்மச்சாரியும் சுவாமி தேசிகரின் திருவடிகளில் விழுந்து வணங்கினான்
வேதாந்த தேசிகம் பஜே!

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________

(பெரிய எழுத்துக்களில்) ________________

________________

________________

அலைபேசி எண் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/- (12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ., இணையதளம்)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

## 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடைத் திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்:
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) இணையதளம் (https://ttdevasthanams.ap.gov.in), இ.எம்.ஓ., வரைவோலை, ஐ.பி.ஓ., டி.டி.-யை "பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ (அ) வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
2வது தளம்,
தி.தி.தே.அச்சகக்கட்டிடம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri R.V. Vijayakumar, B.A., B.Ed., and Published by Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D. P.G.Dip. in JMC. on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.,P.G.Dip. in JMC.



25-09-2025 அன்று திருமலையில் புதிதாகக் கட்டப்பட்ட யாத்திரிகர்கள் தங்கு வசதிக் கூடத்தைத் (பி.ஏ.சி.-5) திறந்து வைத்த மேதகு பாரத துணைக் குடியரசுத் தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. நாரா சந்திர பாபு நாயுடு அவர்கள் உடன் அமைச்சர் திரு.நாரா லோகேஷ் அவர்கள், தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர், தி.தி.தே. செயலாட்சித் தலைவர், உயர் அதிகாரிகள்



25-09-2025 அன்று திருமலையில் ஒருங்கிணைந்த பொது கட்டுப்பாட்டு மையத்தை திறந்து வைத்த மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. நாரா சந்திரபாபு நாயுடு அவர்கள் உடன் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால் மற்றும் தி.தி.தே. உயர் அதிகாரிகள்



24-09-2025 அன்று திருவேங்கடமுடையானுக்கு அணிவிக்க நன்கொடையாக ரூ.3.86 கோடி மதிப்பிலான தங்கப் பூணூலை தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. பி.ஆர். நாயுடு அவர்களிடம் அளித்த திரு.புவ்வாட மஸ்தான் ராவ் தம்பதியினர் உடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழு உறுப்பினர்கள்



18-09-2025 அன்று திருமலையில் மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அன்னதானக் கூடத்தினை தணிக்கை செய்து பக்தர்களிடம் கருத்துக்களைக் கேட்டறியும் தி.தி.தே. செயலாட்சித் தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால் ஐ.ஏ.எஸ். அவர்கள்



13-09-2025 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுவிற்கு பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவியேற்ற ஆ.மா. இந்து சமய அறநிலையத்துறைச் செயலாளர் டாக்டர் எம்.ஹரி ஜவஹர்லால் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதத்தை வழங்கும் தி.தி.தே.கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்



13-09-2025 அன்று தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுவிற்கு பதவி அடிப்படையில் உறுப்பினராக பதவியேற்ற திரு.சுதர்சன் வேணு அவர்களுக்கு ஸ்வாமி பிரசாதத்தை வழங்கும் தி.தி.தே.கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு.வெங்கைய சௌதரி ஐ.ஆர்.எஸ். அவர்கள்



SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-10-2025 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 1st of Every month.

திருச்சானூர்
ஸ்ரீபத்மாவதித் தாயார் புஷ்பயாகம்
26-11-2025